Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 3—No. 4.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

மலர் ௩	பிரமோதூத ஆண்டு சித்திரைத் திங்கள் 1930ஆம் ஏப்ரல்மீ	இதழ் ௪

உள்ளுறை	பக்கம்
சமயத்தொண்டு	௬௫
ஆலங்குடி என்னும் திருவிரும்பூளைக்கோயிற் பெருமை...	௬௧
உமாபதி சிவம் திருமுறைத்திரட்டு	எச
நன்றி மறவாமை	எஅ
"சென்றடையாத திருவுடையான்"	அக
பெரிய புராணம்	அ௨

ஆசிரியர் :—ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், B. A., B. L., M. L. C.

உதவி ஆசிரியர் :—கி. குப்புச்சாமி முதலியார்

சைவ சித்தாந்த மகாசமாஜம்,

150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

ஆண்டுச் சந்தா ரூ. 1-8-0. 1930 வெளி நாட்டுக்கு ரூ. 2-0-0.

தனிப் பிரதி அணா 3.

உ

சிவமயம்

சைவ இளைஞர் மகாநாடு, திருவிடைமருதூர்

சைவசித்தாந்த மகா சமாஜத்தின் சார்பில் திருவிடைமருதூரில் சைவத்திருவாளர் தி. ரா. போ. குப்புச்சாமிப் பிள்ளையவர்களின் பேராதரவில் சைவ இளைஞர் மகாநாடு ஒன்று 1930ஞு ஏப்ரல்மீ 18உ வெள்ளிக்கிழமை நடைபெறும். சென்னை அரசாங்கத்துச் சுகாதார மந்திரியார் சைவத் திருவாளர் - கனம். எஸ். முத்தையா முதலியாரவர்கள் மகாநாட்டைத் திறந்துவைக்க அன்புடன் இசைந்துள்ளார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் சைவத்திருவாளர்-கா. சுப்பிரமணியம் பிள்ளை எம். ஏ., எம். எல்., அவர்கள் தலைமை வகிக்க அன்புடன் இசைந்துள்ளார்கள். சைவ இளைஞர்களின் நன்மையைக் கோரும் ஒவ்வொருவரும் தவறாமல் வந்திருந்து மகாநாட்டைச் செவ்வனே நடத்தி வைக்குமாறு வேண்டுகிறோம்.

நிகழ்ச்சி முறை

1930ஞு ஏப்ரல்மீ 18உ வெள்ளிக்கிழமை

காலை 8-மணி - வரவேற்பு, திறப்புவிழா,
,, 9-மணி - தலைமைப் பேருரை.
மாலை 2-மணி முதல் 5-மணி வரை தீர்மானங்கள்.
,, 5-மணி ,, 6-மணி ,, முடிபுரை, வந்தனை, கடவுள் வாழ்த்து.

இங்ஙனம்: தங்களன்புள்ள,

தி. ரா. போ. குப்புச்சாமிப் பிள்ளை,
வரவேற்புக்கழகத் தலைவர்

ம. பாலசுப்ரஹ்மண்யம்,
சமாஜக் காரியதரிசி.

தி. கு. கி. நாராயணசாமி,
மகாநாட்டுக் காரியதரிசி.

சைவமடங்கட்குச் செல்லுதல்

சைவ மடங்களுக்குச் சென்று சில முறையீடுகள் செய்யுமாறு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள குழுவினரும் அவர்களுடன் செல்ல விரும்புவோரும் இம்மகாநாடு முடிந்தவுடனே மடங்கட்குச் சென்று தங்களாலியன்ற பணி செய்வார்களென்று இதன் மூலம் அறிக்கை செய்ய விரும்புகிறேன்.

இங்ஙனம்:

ம. பாலசுப்ரஹ்மண்யம்,
காரியதரிசி.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சித்தாந்தம்

" ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானதரு வாணியை உள்நாடு "

மலர் ௩	பிரமோதூத ஆண்டு சித்திரைத் திங்கள் 1930 ஹு ஏப்ரல் மீ	இதழ் ௪

சமயத்தொண்டு

[பத்திராசிரியர்]

சில ஆண்டுகளாக எங்கு பார்த்தாலும் சமயத்துறையிலே தொண்டுசெய்ய வேண்டும், சமயக் கல்வியைப் பள்ளிக்கூடங்களில் கட்டாயமாக்க வேண்டும், நமது சமயிகள் புறச்சமயம் புகுவதைத் தடுக்க வேண்டும் என்றெல்லாம் சொற்பொழிவுகள் செய்யும் பேரறிஞர்கள் கூக்குரலிடுவதைக் கேட்டுக் கேட்டுப் பழகிய நமது தமிழ் நாட்டினரின் செவிகள் செவிடு பட்டிருக்கும். செயலிலோவெனின் நாளுக்கு நாள் புறச்சமயம் புகுவோர் தொகையும் அகச்சமயவிரோதிகளின் தொகையும் அதிகரித்தே வருகின்றன என்பதை ஊகிக்கப் போதிய சான்றுகள் உள்ளன. மிகத்தாழ்ந்த இந்நிலையைக் கண்டு பெரிதும் வருந்திய திருவெண்ணெய் நல்லூரில் கூடிய சைவப் பெரியார்களும் அம்மகா நாட்டில் தலைமை வகித்த ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகளும் நமது சமயத்தைப் பரப்புவதற்குச் சில வழிகளைத் திட்டம் செய்தார்கள்.

அவைகளுள் ஒன்று, நமது சமயத்துக்கு அடிப்படையாகவுள்ள தேவார திருவாசகங்களி லிருந்து, சிறு பிள்ளைகள் உணரும் பொருட்டு எளிய திரட்டொன்று கண்டு, நால்வர் சரிதங்களையும் எளியநடையில் எழுதிப் பல ஆயிரக்கணக்கான பிரதிகள் அச்சிட்டு, பள்ளிக்கூடங்களில் பாடமாகவைத்து, இளமையிலிருந்தே நமது சமயிகளுக்குச் சமயஞானத்தை ஊட்டுவதாகும். இதற்குச் செய்ய வேண்டிய எழுத்து வேலைகளை முடித்துத் தருவதற்கு நான்கு பேரறிஞர்களை அம்மகா நாட்டினர் நியமித்தனர். அவர்கள் தங்கள் வேலைகளை முடித்து விட்டனரென்

றும், அவர்கள் எழுதிய சரிதங்களையும் திரட்டிய திரட்டையும் அச்சிடுவதற்குப் போதிய பொருள் உதவுதற்கும் சில செல்வர்கள் ஒப்புக்கொண்டு அவர்களுள் சிலர் தங்கள் பகுதித் தொகையையும் அனுப்பி விட்டார்களென்றும், ஆரம்ப சமய போதனைக்குரிய இந் நூலும் இன்னம் ஒரு மாதத்துக்குள் வெளிவரக்கூடுமென்றும் மிக மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

திருவெண்ணெய் நல்லூரில் கூடிய சைவர் மகாநாடு சமயப்பிரசாரத்துக்கு வேறு பல வழிகளையும் திட்டம் செய்தது. அவ்வழிகளில் உழைக்க வேண்டியவர்கள் எம்மட்டில் உழைத்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள மிகவும்வருந்துகிறோம். நமது சமாஜத்தோடு நூற்றுக் கணக்கான சைவசபைகள் இணைக்கப்பட வேண்டுமென்பது தமிழ்நாட்டுச் சைவர்களின் குறிக்கோள். ஆனால் இதுவரை இணைத்துக்கொண்ட சபைகளின் எண் மிகக் குறைவாக யிருப்பது மிகவும் வருந்தத்தக்கது. ஒரே மனதாகப் பல சபைகள் ஒன்றுசேர்ந்து ஒரு துறையில் உழைத்தால்தான் ஏதாவது சிறிது பயன் கைகூடுமென்பது எவரு மறிந்த உண்மை.ஒவ்வொரு சபையும் ஆண்டுக்கொருமுறை ஆண்டு விழாவொன்று நடத்துவதாக ஏற்படுத்தி இரண்டு தினங்கள் மகேசுவர பூசை செய்வித்துச் சில பட்டதாரிகளை அழைத்துத் திறப்பு, தலைமை முதலியவைகட்குப் பயன்படுத்திக் கொண்டு சில பண்டிதர்களைக்கொண்டு சொற்பொழிவுகள் நடத்திவைத்து மீண்டும் அடுத்த ஆண்டுவரையில் உறங்குவதே பெரு வழக்காக யிருக்கிறது. இவ்வாறு இன்னம் எத்தனை ஆண்டுகள்தான் கழிப்பது? எப்போதுதான் நாடோறும் இடைவிடாது பணிசெய்ய முன் வருவது?

சில சபைகட்கு இவ்விடத்து ஒரு ஐயம் எழலாம். நாடோறும் இடைவிடாது செய்யக்கூடிய சமயப் பணி யாது? ஒரு பைசாகூட செலவில்லாமல் நாடோறும் செய்யக்கூடிய சமயப் பணியில் சில பகுதிகளை மாதிரிக்காகக் கீழே குறிக்கிறோம் :—

(1) ஒரு சபையின் அங்கத்தினர் தினந்தோறும் திருக்கோயிலிற்சென்று வழிபட்டு அங்கு வரும் மக்களுக்குக் கோயில், கடவுளுருவங்கள், உத்ஸவங்கள் இவைகளின் உட்கருத்துக்களை விளக்குதல்.

(2) ஒரு சபையினர் தினந்தோறும் ஏதாவது ஒரு பள்ளிக்கூடத்துக்குச் சென்று ஆங்குள்ள பிள்ளைகட்குச் சமயச்சார்பான கதைகளையும் நீதிகளையும் போதித்தல்.

(3) ஒரு சபையினர் தினந்தோறும் தாழ்ந்த வகுப்பினர் கூடும் இடங்களிற் சென்று அவர்களிடையில் கடவுள் வழிபாடு, கொல்லாமை, கள்ளுண்ணாமை, நல்லொழுக்கம் முதலியவைகளைப்பற்றி உரையாடல்.

(4) ஒரு சபையினர் தினந்தோறும் மாலைப்பொழுதில் ஏதாவது ஒரு வீதியிலோ அல்லது ஒரு கிராமத்திலோ ஒரு சிறு கூட்டம் கூட்டி ஆங்குள்ளவர்கட்குப் பயன்படுமாறு பாதிரிமார்களைப்போல் நமது சமயப் பிரசாரத்தை நடத்துதல். இத்தகைய வழிகளில் எத்தனை சபைகள் உழைக்கின்றன?

திருவெண்ணெய்நல்லூரில் தலைமை வகித்த ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் சமாஜ

வெளியூர் நிர்வாக சபையினர் தேர்தல் நிகழ்ந்த காலத்தில் ஒன்றைக் குறித்து மிகவும் வற்புறுத்தினூர்கள். அதாவது உண்மையில் உழைப்பவர்களையே தேர்ந்தெடுக்கவேண்டும், பட்டதாரிகளையும் அரசியல் முதலிய துறைகளிலேயே கண்ணும் கருத்துமாய் சமயத் துறையை அசட்டை செய்பவர்களையும் நீக்க வேண்டும் என்பதே. அவர்கள் கூறிய புத்திமதியை ஒப்புக்கொண்டு சமயத்துக்கே உழைக்கக் கூடியவர்களை மகாநாட்டினர் தேர்ந்தெடுத்தனர். மாதாமாதம் தாங்கள் இயற்றும் பணியின் விவரங்களை இவ்வெளியூர் நிர்வாக சபையினர் சமாஜக் காரியதரிசிக்குத் தெரிவித்துக் கொள்ள வேண்டுமென்றும் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் கட்டளையிட்டார்கள். அவர்கள் கட்டளையின் படியே மாதப்பணி யறிக்கைப்பத்திரம் என்று பல விவரங்களடங்கிய தாள் ஒன்றை அச்சிட்டுப் பல பிரதிகள் இவ்வெளியூர் நிர்வாக சபையினருக்கு அனுப்பபப்பட்டன. ஆனல்........

அடுத்து வரும் மாதங்களிலாவது நமது சமாஜத்தின் வெளியூர் நிர்வாகசபையினர் ஒருவருக் கொருவர் போட்டியிட்டு, மேலும்மேலும் சிறந்த பணி செய்து அவ்விவரங்களை யெல்லாம் நமக்கு அனுப்புவார்களென்று உண்மை யாகவே நம்பி அவ்வாறு செய்யுமாறு அவர்களை மிகப் பணிவுடன் வேண்டுகிறோம். ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளின் கட்டளைப்படி அவ்வப்போது வெளியூர் நிர்வாக சபையினர் செய்துவரும் பணி விவரங்களை வெளியிடக் கடமைப்பட்டுள்ளோம். ஆகையால் இந்த இதழோடு வரும் அறிக்கைப் பத்திரத்தையும் சென்றயிதழோடு வந்த பத்திரத்தையும் நிரப்பி மறுதபாலில் அனுப்பி நமது சமாஜத்தின் நன்றியையும் சைவ வுலகத்தின் நன்றியையும் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளின் அருளையும் ஒருங்கே பெறுமாறு இப் பெரியார்களைப் பெரிதும் வேண்டுகிறோம்.

நமது பத்திரிகையைப் பலப்படுத்துதல், நமது தேவார வெளியீடுகளை விற்று முதலாக்குதல், ஒவ்வொரு தாலூகாவிலும் ஒரு சபையையாவது உண்டாக்கி நமது சமாஜத்தோடு இணைத்து வைத்தல், எளிய வகுப்பினருக்கும் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகட்கும் தவருது சமயபோதனை செய்தல் முதலிய வழிகளில் மிகச்சிறப்பாக கவனத்தைச் செலுத்துமாறு இப்பெரியார்களை மிகத்தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

"முன்னவனே முன்னின்ருல் முடியாத பொருளுளதோ?" என்ருர் சேக்கிழார் பெருமான். நமது சமய முன்னேற்றத்துக்கு நமது சமயத் தலைவஞகிய ஆண்டவன் என்றும் முன்னிற்கிருன். அவனருளும் முன்னிற்கிறது. அவனருளைத் துணைகொண்டு நம் சமயப் பணியாளர்கள்தான் முன்னிற்க வேண்டும். அவ்வாறு முன்னின்ருல் முடியாத பொருள் யாதுமில்லை யென்பது முக்காலும் சத்தியம். இத்தருவாயின் தேவை பணியாளர்கள் முன்னிற்றலேயாகும்.

சமயப்பணி செய்வதற்கு மங்கையர்கள் முன் வந்துள்ளார்கள். நமது சமாஜத்தில் மங்கையர் பகுதியொன்றும் ஏற்பட் டிருக்கிறது. இளைஞர்களும் முன் வந்துள்ளார்கள். திருவிடைமருதூரில் கூடும் சைவ இளைஞர் மகாநாட்டினையே சைவ உலகம் நோக்கிக்கொண் டிருக்கிறது. அம்மகாநாடும் தக்க

தலைவரைப் பெற்றிருக்கிறது. அதன் தீர்மானங்களும் பணி செயல் வகைக் குரிய வழிகளைத் திட்டமாகக் கூறும் என்று எதிர்பார்க்கிறோம்.

ஆலயங்களைப் புதுப்பித்துக் கும்பாபிஷேகங்கள் நடத்தும் தனவணிகப் பெருமக்களும் அக்காலங்களில் சமயபோதனை நடத்த வேண்டிய கடமையை யுணர்ந்துள்ளார்க ளென்பது நமது சமயவளர்ச்சிக்கோர் நல்ல அறிகுறியாகிறது. ஆலங்குடித்தான் ஆலங்குடியானைக் கோயில் கொண்டிருக்கும் நீடாமங்கலத்துக் கருகிலுள்ள ஆலங்குடி க்ஷேத்திரத்தில் நாளது வைகாசிமீ ௧௯௨ நடைபெறும் கும்பாபிஷேகத்தை யொட்டி நமது சமாஜத்தின் விசேஷ மகாநாடு ஒன்றை மூன்றுநாட்கள் கூட்டிச் சமயபோதனை செய்யுமாறு கும்பாபிஷேக நிர்வாகஸ்தர்கள் அழைத்துள்ளது நமக்குப் பெருமகிழ்ச்சியை விளைவிக்கின்றது. இஃதேபோல் ஏனைய ஆலயங்களிலும் பெரிய விழாக்காலங்களி லெல்லாம் நமது சமாஜத்தின் துணைகொண்டு சமய போதனை செய்தற்குரிய ஏற்பாடுகள் நடைபெறும் என்று எதிர்பார்க்கிறோம்.

ஏனையோர் செய்ய வேண்டிய பணிகள் பற்பலவாக விருந்தாலும் நமது சமாஜத்தின் சாதாரண அங்கத்தினர்கள் செய்தற்குரிய பணிகளும் நிரம்பவுண்டு. சந்தாவைச் செலுத்திப் பத்திரிகையை வாங்கி விடுவது மட்டும் சமய வளர்ச்சியாகாது. பத்திரிகையில் வரும் விஷயங்களைத் தங்கள் நண்பர்கட்கெல்லாம் அவ்வப்போது தெரிவித்தும் எளிய மக்களுக்கு எளிய நடையில் விளக்கியும் தங்கள் இல்லங்களிலுள்ள பிள்ளை பெண்டிர்க்குப் போதித்தும் வருதல் சாலச்சிறந்தது. அதோடு மட்டும் நில்லாது பல அங்கத்தினரைச் சேர்த்து நமது சமாஜத்தைப் பலப்படுத்துதல் மிகச் சிறந்த பணியாகும். இதைப்பற்றி இம்மலரின் முதலிதழில் எழுதியதைக் கண்ணுற்ற ஊக்கசிகாமணிகள் சிலர் பல புதிய அங்கத்தினரைச் சேர்ப்பித்து உதவி புரிந்தார்கள். அவர்களைப் பின்பற்றி ஏனையோரும் குறைந்தது தலைக்கொரு புதிய அங்கத்தினர் வீதமாவது சேர்த்து உபகரித்தல் கூடுமா? கூடாதா? என்று உண்மையாகவே நமது சந்தா நேயர்களை வினவுகிறோம். ஒவ்வொரு ஊரிலும் வசிக்கும் நமது சமாஜ அங்கத்தினர் ஒன்று சேர்ந்து புதியசபை யொன்று தாபித்து, நமது சமாஜத்தோடு அதை இணைத்துக் கொள்வது கூடுமா? கூடாதா? என்றும் அவர்களை உண்மையாகவே வினவுகிறோம்.

மெய்யன்பர்களாகவும் உண்மையும் ஊக்கமும் நிரம்பியவர்களாகவும் உள்ள நமது சமாஜத்தினர் ஒரு சிறிதும் பின்வாங்காது நாம் கூறின வழிகளில் முன்னின்று நமக்கு ஊக்கத்தையும் உவகையையும் அளிப்பார்களென்றே எண்ணுகிறோம்.

[**முருகன் திருவருட்பா:**—இது வடலூர் ஞானவள்ளலாரின் அமுத மொழியாகும். முருகவேள் கலியுக வரதன் என்பதும் இராமலிங்க சுவாமிகள் இருபதாம் நூற்றாண்டினர் போற்றுதற்குரிய ஞானி யென்பதும் யாவரும் அறிந்ததே. இந்நூலை வெளியிட்ட பாலன் பதிப்புக் கழகத்தினருக்கு முருகனடியவர் நன்றி பெரிதும் உரித்து. ௧௨௨ பக்கங் கொண்ட நூல். விலை அணா ௮. இராயப்பேட்டை முருகவேள் புத்தகசாலைக்கு எழுதுக.]

ஆலங்குடி என்னுந் திருவிரும்பூவளைக் கோயிற் பெருமை

[சுவாமி - வேலாயுதம் பிள்ளை, பி. ஏ., எல். டி.]

ஞால நின்புகழே மிக வேண்டுந்தென்திரு
ஆல வாயில் அமர்ந்துறைஎம் ஆதியே !

முன்னுரை

சிவன் கோயில்களே சைவ சமயத்தை வளர்ப்பதற்குச் சிறந்த அடிப்படைகள் ஆகும். அக்கோயில்களில் எழுந்தருளியிருக்கும் இறைவனை வழிபடுவதால் தொண்டர்கள் இன்புறுகின்றனர். இவ்வின்பத்தை மிகுதியாக்குவன அக்கோயில்களின் வரலாற்றை நன்குணர்தலும், அக் கோயில்களைச் சிறப்புறும்படி செய்திருக்கிற அருந்தொண்டர்களின் பாடல்களைப் பாடுதலுமேயாம். இவ்வாறின்றிப் பலர் அவ்வரலாற்றினைப் பிறழ உணர்ந்துங் கூறியும் எத்துணை அறியாமையை வெளியிடுகின்றனர் ? அக்கோயிற் பண்களைப்பாடாது அறவே ஒழிக்கின்றனர். அக்கோயில்களில் இதற்கென ஏற்படுத்தப்பட்ட ஓதுவார்களும் அக் கோயிற் பண்களை மறந்தும் பாடாது விடுகின்றனரன்றோ ? இக் கொடுமைகளை நீக்கவே இவ்வரலாற்றுச் சுருக்கமும், பண்ணுஞ் சேர்த்து அச்சிடப்பட்டிருக்கின்றன. இதனால் அன்பர் இன்புறுவாராக.

எல்லாரு மின்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.

கலங்காமற் காத்த பிள்ளையார் :— ஆலங்குடி கோயிலின் தென்மேற்கு மூலையில் எழுந்தருளியிருக்கும் பிள்ளையாரின் பெயர் இதுவாகும். முன்னொரு காலத்தில் **கஜாசுரன்** என்பான் பலருக்குத் தீமை செய்ததன்றி ஆகாயத்திற் சென்று அங்குள்ள அண்டச் சுவரை இடித்து விட்டான். அதனால் ஆகாய கங்கை பெருகி ஆலங்குடி தவிர உலக முழுவதையும் மூழ்கச் செய்தது. இதை நீக்க பிரமன், திருமால் முதலிய தேவர்கள் இக்கோயிலுக்கு வந்து இறைவனை வழி பட்டனர். அவரருளால் பிள்ளையார் சென்று மேலுள்ள ஓட்டையைத் தனது காற்பெரு விரல் நகத்தால் அடைத்துவிட்டுக் கீழுள்ள வெள்ளத்தைத் தனது துதிக்கையால் உறிஞ்சி வற்றச் செய்தார். இவ்வாறு இவர் யாவரையுங் கலங்காது காத்ததால் இப்பெயர் பெற்றார்.

ஆலங்குடி என்னும் பெயர் வந்த வகை :— பண்டைக் காலத்தில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் பெரும் போர் நடந்தது. அதில் பலர் இறந்து துன்ப மடைந்தனர். இவ்வாறு இறவாதிருக்க யாவருஞ் சென்று திருமாலை வேண்டினர். அவர் அமிர்தத்தை உண்டாக்குவதற்காக மேரு மலையை மத்தாகவும், வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகவும் பயன் படுத்தி, திருப்பாற் கடலைக் கடையப் புகுந்தார். கயிற்றின் ஒரு முனையைத் தேவர்களும் மற்றொரு முனையை அசுரர்களும் பிடித்து இழுத்துக் கடைந்தார்கள். அப்பொழுது வாசுகி யென்னும் பாம்பு வலி பொறுக்க முடியாது விஷத்தைக் கக்கிற்று. அதே பொழுதில் திருப்பாற் கடலிலிருந்து விஷமுண்டாயது. இவ்விஷங்களின் சூட்டைப் பொறுக்க முடியாத தேவர்களும் அசுரர்களுங் கலங்கி ஓட்டம் பிடித்தனர். அவர்களைக் காப்பதற்காகச் சென்ற திருமாலின் திரு

மேனி வெந்து கருகிற்று. பின் யாவருஞ் சென்று சிவபெருமானிடம் முறையிட்டு வேண்ட, அவர் மனம் இரங்கித் தன் தோழனாகிய சுந்தரனை அனுப்பினார். அவர் சென்றதும் அவ்விஷம் சிறுத்து அவர் கையிலடங்கிற்று. அதைக் கொண்டு வந்து சிவபெருமானிடங் கொடுக்க, அவர் அதை வாங்கி உண்டார். உமாதேவியார் அவ்விஷம் கீழிறங்காதபடி அவர் தொண்டையைப் பிடித்துக் கொள்ள, அங்கேயே அது தங்கிற்று. தேவர்கள் அசுரர்கள் யாவருந் தங்களைக் காத்ததற்கு அடையாளமாக அவ்விஷத்தை எப்பொழுதும் தொண்டையிலேயே அடக்கி வைத்திருக்கும்படி வேண்டினர். அவ்வாறே செய்ததால் இறைவன் திருநீலகண்டரானார். இவ்வாறு பெரிய ஆபத்தினின்றும் அவர்களைக் காத்ததால் ஆபத்சகாயர் என்றும் அழைக்கப் பெற்றார். அவ்வூருக்கும் ஆலங்குடியென்னும் பெயருண்டாயிற்று. இதனை விகடமாகக் காளமேகப் புலவரும்,

ஆலங்குடி யானை ஆலாலம் உண்டானை
ஆலங்குடியான் என்று யார்சொன்னார்-ஆலங்
குடியானே யாகிற் குவலயத் தோரெல்லாம்
மடியார்களோ மண் மீதில்.

என்று சிறப்பித்துப் பாடியருளினர். இவ்வூரிலேதான் விஷங்குடிக்கப் பெற்றது என்பதற்கு அடையாளமாக இவ்வூரிலுள்ளோர்க்கு விஷத்தால் ஒரு தீங்கும் நாளைக்கும் நேர்வதில்லை.

இவ்வாறு சிவபெருமான் விஷத்தைக் குடித்த பின் தேவர்கள் சென்று திருப்பாற்கடலை மறுபடியுங் கடைந்தனர். அதிலிருந்து மூதேவியும், சீதேவியும், கௌஸ்துபமணி முதலியனவும் கடைசியாக அமிர்தமும் உண்டாயிற்று. அவ்வமிர்தத்தால் ஆலங்குடிப் பெருமானை அபிஷேகம் செய்ததன்றி அக்கோயிலைச் சுற்றியும் நிறப்பி வைத்தனர். இதுதான் இப்பொழுது 'இக்கோயிலைச் சூழ்ந்திருக்கிற அமிர்த புஷ்கரணியாகும். பின் தேவர்கள் 'அசுரர்களை ஏமாற்றிவிட்டு அமிர்தத்தைத் தாங்களே உண்டு இறவாதிருந்தனர்.

இதன் உட்கருத்து:—நம்மை வாட்டுகின்ற கொடிய தீமைகளை ஆலகால விஷம். இவைகளை அடக்கவல்லவர் பரம் பொருளாகிய பரமசிவனன்றி வேறொருவருமல்லர். ஆதலின் அவர் அடியவருக்காக நஞ்சுண்ட பெருங் கருணையை நினைந்து உருகி வேண்டிக் கொள்ளின் தீரா வினைகளுந் தீருமென்பதற்கு ஐயமில்லை. இவ்வாறு நீக்கிக் கொண்ட பெரியார்களுட் பெரியார் திருஞான சம்பமூர்த்தி நாயனாராவர். இவர் தீமைகளைத் தீர்த்துக்கொண்ட வகையாவது :—

இவர் தனது 16,000 திருக்கூட்டத்தார்களுடன் கொங்கு நாட்டில் ஸ்தல யாத்திரை செய்து கொண்டிருந்த பொழுது காவிரியின் தென்கரையிலுள்ள கொடிமாடச் செங்குன்றூரில் தங்கியிருந்தார். ஆங்கு அடியவர் யாவரும் குளிர் மிகுதியாலும், பனி மிகுதியாலும் நோயுற்றனர். இது நாயனாருக்குத் தெரிந்ததும் அவர் இந்நோயை நீக்க "எவ்விடத்தும் அடியார் இடர் தீர்ப்பது திருநீலகண்ட மென்றே" என்று திருநீலகண்டப் பதிகம் பாடினார். இதனால் அடியவர்க்கன்றி அந் நாட்டிலுள்ளோர் யாவர்க்கும்அந்நோய் நீங்கிற்று. இப்பதிகத்தை நாமும் ஓதின், நம் நோயுந் துன்பங்களும் நீங்குமென்பது திண்ணம்.

இவ்வாறு நீங்குவதற்கு வேறொரு நல்வழி பிரதோஷ விரதம் இருத்தலாம். ஒவ்வொரு மாதத்திலும் சாயுங் காலத்தில் வருகிற இரண்டு * திரயோதசி திதிகளும் அவ்விரதத்திற்குஉரிய நாட்களாம். அன்று பொழுது போக் ஐந்து நாழிகையி லிருந்து பொழுது போய் ஐந்து நாழிகை யளவும் இறைவன் நஞ்சுண்ட பெரிய தோஷகாலமாகக் கருதப்படும். அந்நாள் முழுவதும் பட்டினியுற்று சாயுங்காலத்தில் சிவ பெருமானைத் தரிசித்து வணங்குவோர் பலப்பல தீமைகளிலிருந்தும் நீங்குவ ரென்பது பலர் அறிந்ததே. இதைப் படிப்போர் யாவரும் இவ்வரிய நன்மை அடைவார்களாக.

தக்ஷிணமூர்த்தி:- ஆலங்குடிக் கோயிலில் மிகுதியாகக் கொண்டாடப் படுகிற கடவுள் தக்ஷிணமூர்த்தியே யாவர். இக்கோயிலில்நடக்கும் உற்சவம்யாவும் தக்ஷிணமூர்த்தி உற்சவருக்கே நடக்கிறது. இப்பெருமை வேறொரு கோயிலுக்கும் இல்லை. இம்மூர்த்தியின் வரலாறுவது :—

முன்னொரு காலத்தில் சனகர், சநந்தர், சநாதனர், சனற்குமாரர் என்னும் நான்கு முனிவர்கள் வேதத்தின் பொருள் புரியாது மயங்கி, பிரம விஷ்ணுக்களால் தெளியாது, இறைவனை நோக்கித் தவம்புரிந்தனர். பின் இறைவன் தோன்றி ஆகமங்களால் தெளிவித்தனர். பின்னும் மனம் அடங்காது வருந்திய அந்நால்வர்க்கும் இறைவன் தக்ஷிணமூர்த்தி வடிவுடன் வீற்றிருந்து யோகத்தால், ஞானமடைந்து நிஷ்டை கூடும்படி செய்தனர். இவ்வாறு இறைவன் யோகத்திலிருந்த பொழுது உலகம் யாவையும் அடங்கி ஒடுங்கிப் போயிற்று. இதனை நீக்கக் கருதிய பிரமன், காமனை ஏவி இறைவன் தவத்தை அழிக்கச் செய்தனர். அவன் புஷ்ப பாணங்களால் எய்ததும், இறைவன் நெற்றிக்கண்ணால் நோக்க, அவன் வெந்து சாம்பல் ஆயினன். பின்னும் இறைவர் யோகம் புரிவாராயினர். அது கண்ட தேவர்கள் யாவரும் கூடி வேண்ட அவர் விழித்து அருள்புரிந்து உமையம்மையை மணந்து உலகம் யாவும் விளக்கமுறச் செய்தனர். இவ்வாறு மணம்புரிந்த இடம் **திருமணமங்கலம்** என்னும் ஊராகும். இது ஆலங்குடியை அடுத்து வடக்கேயிருக்கிறது.

* வளர் பிறையில் ஒன்றும் தேய்பிறையில் ஒன்றும் ஆக இரண்டு.

தக்ஷிணமூர்த்தியின் பெருமைகள்:- இவரே ஞானமூர்த்தி யாவர். இவர் ஒன்றிலுந் தோயாது குணமற்றிருப்பவ ரென்பதைக் குறிக்கப் பளிங்கு போன்ற திருமேனி யுடையவராவர். இவர் எல்லாத் தீமைகளையும் அடக்கி யாளும் வலிமையுடையவர் என்பதற்கு அடையாளமாகத் தன் வலது காலால் முயலகனை மிதித்து வீற்றிருக்கின்றனர். இவரது நான்கு கைகளுள் ஒரு வலக்கை சின்முத்திரை என்று சொல்லப்படுகிற ஞானக்குறியைக் காட்டுகிறது. இதன் பொருள் நீட்டி இருக்கிற மூன்று விரல்களாகிய மும்மலங்களையும் (ஆணவம், மாயை, கன்மம்) நீக்கி, கட்டை விரலாகிய இறைவன் திருவடியுடன் ஆட்காட்டி விரலாகிய உயிர் சேர்வதே முத்தி என்பதாம். மற்றொரு வலக்கை உருத்திராக்க மாலையைப் பிடித்திருக்கிறது. இது ஐந்தெழுத்தை உருத்திராக்க மாலை கொண்டு எண்ணி, பன்முறை சொல்லுதலே ஞானத்தைக் கொடுக்கும் வழி

என்று குறிப்பிடுகிறது. இதனாற்றான் இம்மூர்த்தியின் முன்னிருந்து ஜெபம் செய்யும்படி விதி ஏற்பட்டிருக்கிறது. இவர் இடது கை ஒன்றில் ஏந்தியிருக்கிற அமிர்த கலயம் பேரின்பத்தை அளிக்க வல்லவரென்பதைக் காட்டுகிறது. மற்றொரு இடக்கையில் தாங்கியிருக்கும் சிவஞானபோதச் சுவடி, இந்நூலே உண்மை ஞானத்தை விளக்குகிறதென்பதையும், ஞானத்தால்தான் முத்தி அடையக்கூடும் என்பதையும் உணர்த்துகிறது. யாவராலும் வெல்ல முடியாத காமனை இவர் கொன்றது இவரை வழிபட்டால் எளிதில் பெண்ணாசையை நீக்கலாமென்பதை விளக்குகிறது. * இவ்வாறு பல அரிய அடையாளங்களுடன் கூடிய இம்மூர்த்தியை எப்பொழுதும் வணங்கி முத்தி அடைவோமாக. இவ்வாறு செய்ய இயலாவிடின் இக்குரு மூர்த்திக்குப் பிரியமான குருவாரம் (வியாழக்கிழமை) தோறும் தவறாதுவணங்கினால் பெரும்பேறடையலாம்.

சுந்தரமூர்த்தி நாயனார் இவ்வூருக்கு வந்த வகை:—ஆலகால விஷத்தை அடக்கிக் கொண்டுவந்து கொடுத்த சுந்திரனார் இவ்வுலகில் சுந்திரமூர்த்திநாயனாராகப் பிறந்து, திருவருள் பெற்று, திருவாரூரில் வந்திருந்த பொழுது ஆலங் குடிக்குச் சென்று வணங்க விரும்பினார். அதற்காகப் பயணப்பட்டுப் போகும்பொழுது சிவபெருமான் திருவிளையாடல் புரியக்கருதி வழியிலுள்ள அகஸ்திய காவேரி என்னும் வெட்டாற்றைப் பெருகவைத்தார். வெள்ளம் மிகுதியாக இருந்ததால் ஓடம் விடுவார் ஒருவரும் இல்லை. ஆதலின் கசிந்து உருகி இறைவனை வேண்டினார். உடனே சிவபெருமானே ஓடக்காரனாக வந்து சுந்தரமூர்த்தி நாயனாரையும் அடியார்களையும் ஏற்றிக்கொண்டு சென்றார். நடுஆற்றிற் சென்றதும் பரிசுக்கோலை வேண்டுமென்று தவறவிட்டு அதை எடுக்கப் போவார் போல் ஆற்றில் விழுந்து தத்தளித்துக்கொண்டும் ஆற்றுடன் சென்றார். ஓடமும் ஆற்றுடன் சென்று **திருக்கோளம்பூ**தூரை அடைந்தது. சுந்தரர் அவ்வூர் இறைவனை வேண்ட அவர் தோன்றிக் காப்பாற்றுவதாகக் கூறி மறைந்தனர். பின் ஓடஞ்சென்று பாரின்மீது மோதி அமிழ்ந்ததால் அவ்விடம் **அமிழ்ந்தீச்சுர** மென்றழைக்கப்படுகிறது. பின் இறைவன் திருவருளால் சிதறுண்ட பலகைகளைப் பிடித்துக்கொண்டு மிதந்து சென்றார்கள். அவ்வாறு சென்றவிடம் **கப்பலுடையா**னென்று அழைக்கப்படுகிறது. இவ்வாறு செல்லும்பொழுது இறைவனை மீண்டும் மீண்டுந் துதிப்ப, அவர் தோன்றிக் கரையிலிருந்து கொண்டே தன் நீண்ட கைகளால் அவர்களை இழுத்துக் கரை யேற்றினர். இவ்விடம் **கைப்பத்தூர்** என்றழைக்கப்படுகிறது. இவ்வாறு அக்கரை சேர்ந்ததும் ஆலங்குடி சென்று இறைவனை வணங்கித் திருவாரூருக்குத் திரும்பினர்.

* இவ்வாறு காமனை வென்ற கடவுள் பெண்ணாசை மிகுத்தவர் என்று பலர் கூறி கொடிய நரகத்திற்கு ஆளாகின்றனர். இவர்கள் உணரவேண்டியது யாதெனில் ஞானமூர்த்தியாகிய சிவபெருமானுக்கு உமையும், கங்கையும் இருசக்திகளே அதாவது அவர் வல்லமைகளைக் குறிக்கின்றனர். அவர் பள்ளியறை செல்வது உமையுடன் கூடியிருப்பதற்கன்று. ஆங்கு கண்ணாடி வாயிலாக அன்பர்களுக்கு அருவதரிசனந் தந்தருளுவதற்கே. அங்கே சத்தி, பால், பழம் வைப்பது பிற்காலத்தவர் சேர்க்கை. ஆகமமார்க்கமல்ல.

அமுதோக மந்திரி கதை:—இந்த ஆலங்குடிக் கோயிலை முதன் முதல் திருப்பணி செய்தவர் முசுகுந்த சக்ர வர்த்தியின் மந்திரியாகிய அமுதோகர் ஆவர். இவர் இக்கோயிலைக் கட்டும் படி முசுகுந்தர் கொடுத்த பொருளை வைத்து விட்டுத் தன் பொருளைப் போட்டுக்கட்டி முடித்தார். அரசன் தன் பொருளை எடுத்துக்கொண்டு திருப்பணியினு லாகிய புண்ணியத் தைக் கொடுக்கும்படி எவ்வளவு கேட் டுங் கொடாததினுல் அமுதோகரைக் கொலை புரிந்தான். இவ்வாறு கொலை செய்த விடம் **அபிமுக்தீச்சுரம்** என்றும் **அமுதோகேச்சுரம்** என்றும் வழங்கப் படுகிறது. அமுதோகரின் உயிர் தக்ஷிணுமூர்த்தி திருவடி நீழலைஅடைந் தது. முசுகுந்தரும் அவரை வழிபட் டுப் பின் முத்தியடைந்தனர். இவ் வாறு பலர் முத்திபெற்ற இக்கோயி லின் பெருமை சொல்லவும் பெரிதே!

இக்கோயில் கும்பகோணத்தி லிரு ந்து நீடாமங்கலத்துக்குச் செல்லும் வழியில் 11-வது மைலில் உள்ளது. நீடாமங்கலத்தி லிருந்து 4-மைலில் இருக்கிறது. இக்கோயிலைச் சுற்றிலும் சுமார் ஐந்துமைல் வட்டத்தில் திருக் கலைய நல்லூர், திருக்கடுவாய்க் கரைத் தென்புத்தூர் (ஆண்டான் கோயில்) திருநாரையூர், திருக்குட வாயில், திருக்கொள்ளம்பூதூர், திருப்பாதா ளீச்சுரம், திருப்பூவனூர், திருஅர தைப் பெரும்பாழி (அரித்துவார மங் கலம்) கோவில் வெண்ணி ஆகிய பல பாடல் பெற்ற கோயில்கள் இருக்கின் றன. இக்கோயில் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனுரால் திரு இரும்பூளை என்று பாடப்பெற்றிருக்கிறது. ஏனெ னில் பூளைச் செடியே இவ்வூர் ஸ்தல விருக்ஷமாகும். அதனுல் பூளைப் பூவால் இவ்வூரில் எழுந்தருளி யிருக்கும் சிவ லிங்கப் பெருமான் பூசிக்கப்பெறுவார். இவ்வூர் முன்னொரு காலத்தில் பூளை வனமாக இருந்த தென்பதை, இவ் வூரருகே செல்லும் ஆறு **பூளைவன ஆறு** (புலவனுறு) என்று அழைக்கப் படுவதே நிலைநிறுத்தும்.

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனுர் தேவாரம்

திருவிரும்பூளை - வினவுரை - பண் இந்தளம்

திருச்சிற்றம்பலம்

சீரார் கழலே தொழுவீர் இது செப்பீர்

....

பந்தம் மறுத் தோங்குவர் பான்மை யினுலே.

திருச்சிற்றம்பலம்

சுவாமி பெயர் - காசியாரண்ணியேசுரர்
தேவியார் - ஏலவார்குழலம்மை.

பெரியபுராணம்
திருஞான சம்பந்தமூர்த்தி நாயனுர் புராணம்

தேவர்பிரா னமர்ந்த திருவிரும்பூளை......
பொருள் விரியப் பாடினுர்.

400, 401, 402.

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனுர் தேவாரம்

திருநீலகண்டம் - பண் வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

அவ்வினைக் கிவ்வினையா மென்று
சொல்லு மஃதறி வீர்

....

....

நிறைந்த வுலகினில் வானவர்
கோனொடுங் கூடு வரே.

திருச்சிற்றம்பலம்

பெரியபுராணம்
திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் புராணம்

அந்நாளிற் கொடி மாடத்......
தீர்த்த தன்றே.

333, 334, 335, 336.

திருவிளையாடற் புராணம்
பாயிரம் - தக்ஷிணாமூர்த்தி துதி

கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா
றங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வர்க்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டி
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
நினைந்துபவத் தொடக்கை வெல்
[வாம்.

வாழ்க ! வாழ்க ! !
இறையருள் வாழ்க ! ! !

உமாபதிசிவம் திருமுறைத்திரட்டு

[இலக்கணவிளக்க ஆசிரியர் பரம்பரை - சோமசுந்தர தேசிகர்]

சைவசமயாசாரியர் நால்வருள் மூவர் முதலிகளான அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரும் சிவபெருமான்மீது பாடிய தோத்திரப் பாக்கள் தேவாரம் எனப்படும். அவரவர்கள் பாடியன அளவற்றன வாயினும் திருமுறைகண்ட இராஜராஜனால் வெளியிடப்பட்டவை சம்பந்தரது பதிகங்கள் முந்நூற்று எண்பத்துநான்கும், நாவுக்கரையரது முந்நூற் றேழும், வண்றொண்டரது நூறு பதிகங்களுமாம். மற்றவை இலவாயின. அச்சிடப்பட்டன வற்றில் சம்பந்தரது பதிகங்களில் ஒன்று குறைவாக 383 பதிகங்களே அச்சாகி வந்தன. இற்றைக்குச் சுமார் பதினைந்து ஆண்டுகட்கு முன் எனது நண்பரும் சிவஞானச் செல்வருமான திருக்களர்-தி. மு. சுவாமிநாத உபாத்தியாயர் சிவபெருமான் கோயில் கொண் டெழுந்தருளியுள்ள தலங்கள் தோறும் தரிசிக்க வெண்ணிச் சென்ற காலத்து திருவிடைவாய்* என்ற திருப்பதியிலே மகாமண்டபம் முன் மண்டபங்களின் தென்புறச் சுவரிலே சில எழுத்துக்கள் இருக்கக் கண்டு அவற்றினை வாசித்த காலத்து, 'நாறும் பொழிற் காழியர் ஞான சம்பந்தன்-கூறுந் தமிழ்வல்லவர் குற்றமற்றோரே' என்று காணப்படவே முழுவதையும் வாசிக்க முயற்சித்து எழுதி வெளிப்படுத்தினார். அடியேனும் சென்று பார்த்து 'செந்தமிழில் இத்தேவாரத்தை வெளியிட்டதோடு அரசாங்கத்துக்கும் எழுதி கோயிலைப் பாதுகாக்க ஏற்பாடும் செய்தேன். அவ்வொரு பதிகமும் சேர 384 பதிகங்களாயின.

இத்திருமுறைகள் அள்வாற் பெரியனவா யிருப்பது கொண்டு நித்தியப்படி பாராயணம் பண்ணுதற் பொருட்டுச் சிவாலய முனிவர் வேண்டுகோட்கிணங்கி ஒரு பெரியாரால் **அகத்தியர் தேவாரத்திரட்டு** என ஒன்று திரட்டப்பட்டது. இது சிவாலய முனிவருக்குத் திரட்டப்பட்ட தென்பது,

குருவுருவம் வெண்ணீ றெழுத்தஞ்சு கோவில்
அரனுருவ மென்றலைமே லாக்குந்—திருவடி
[யுஞ்
சிட்டான வர்ச்சனையுந் தொண்டுஞ் சிவால
யிட்டா ரகத்தியனு ரெட்டு. [யற்கன்

---

* இது தஞ்சையிலிருந்து நாகபட்டினம் செல்லும் இரயில் மார்க்கத்தில் கொரடாச்சேரி என்ற இரயிலடிக்குத் தென்கிழக்கில் இரண்டுமைல் தூரத்தில் பாண்டவாய ஆற்றின் தென்கரையில் இருக்கின்றது. இது பொழுது **திருவிடவாசல்** என வழங்குகின்றது.

தோடு கூற்றுப் பித்தா மூன்றும்
பீடுடைத் தேசிகன் போரு ளாகும்
* * * *
* * * *

இப்பரி சகத்திய முனிவ னிருநிலத்
தொப்பரு மூவரு மோதுதே வார
முழுதையுஞ் **சிவாலய முனிக்கறி** வித்துப்
பழுதிலா வவையுட் பரிந்தெடுத் திருபா
னோந்துயர் பதிகமு மறிவுறத் திரட்ட
யெண்ணரு மடங்கல் யாவையு மூணரும்
புண்ணிய மிவைகொடு பொருந்து மென்
[றளித்தனன்
அன்பன் றனக்கன் றகவுற வதனுற்
றீதிலா **வகத்தியத் திரட்டினை** யுலகில்
ஓதின ரடங்கலு மோதின ராவரே.

என்ற பதிகச் செய்யுள்களால் விளங்கும். இதனிற் குறித்த சிவாலய முனிவர் யார், எக்காலத்தவர் என்பது அறிதற்கில்லை. திருமுறை கண்டவனை **இராஜராஜன்** என்னும் **ஆதித்தகரிகாலன்** காலத்திலே ஒரு சிவாலய தேவர் இருந்ததாகத் திருமுறை கண்ட புராணம் கூறும். அவர் தாமோ இவர் என்பது ஆராய்தற்குரியது. இத்திரட்டில் அப்பரது தேவாரத்துள் எட்டுப் பதிகங்களும் சம்பந்தர் தேவாரத்தில் பத்துப் பதிகங்களும், சுந்தரர் தேவாரத்தில் ஏழு பதிகங்களும் இருக்கின்றன. இத்திரட்டே நாளதுவரையில் தமிழுலகில் வழங்கி வருகின்றது.

சந்தானசாரியார்களுள்ளே கடைசியில் வருபவரும் தில்லை மூவாயிரவருள் ஒருவரும் கொற்றவன் குடி முதலியாரெனச் சிறப்புப் பெயர் பெற்றவருமான **உமாபதிசிவம்** திருமுறைத் திரட்டொன்று திரட்டியிருக்கின்றாரென்று சிலநாள் முன்னர் அறியலானேம்.* இவரே இது திரட்டியவரென்பதற்கு ஆதாரமாக இரு செய்யுள்கள் கிடைக்கின்றன. ஒன்று ஞான தீக்கை என்ற நூலில் காணப்படும் கடைசிச் செய்யுள். அது வருமாறு:—

தேசுமிகு மருட்பயின்ற சிவப்பிர காசத்திற்
றிரிந்துபொதுச் சங்கற்ப நிராகரணத் திரு
[த்தி
யாசிலருள் விணவெண்பாச் சார்பு நூலாலே
அருளெளிதிற் குறிகூட வளித்து ஞானப்
பூசைதக்க காரணமுன் புகன்றதனிற் புரிந்து
புணர்விக்கச் சிவஞான போதசித்தி வழி
[நூன்
மாசில்சத மணிக்கோவை முன்னூலிற் சான்று
மருவுதிரு முறைத்திரட்டும் வைத்தனன்
[மன்னுயிர்க்கே.*

இரண்டாவது திருவருட் பயன் விண வெண்பாவில் 'திருமுறைத்திரட்டுணர்த்துந் தேவே' என்று ஒரு செய்யுளில் வருவதாக இத்திரு முறைத் திரட்டினீற்றில் எழுதப்பட்டிருப்பதையும் உமாபதி சிவத்திற்கு ஒரு துதிச் செய்யுளும் காணப்படுவதையும் கீழே குறிக்கின்றேன்.

ஓரறி வாதி யைந்தறி வுயிர்க்கும்
முண்மையாஞ் சிவானந்தப் பொருளை
யொருமைய தாக வனுபவ விருப்ப
முள்ளத்தி லுணர்த்தி வினையும்
வேரறக் களைந்து வீடளித் துதவும்
விமலநற் றேசிக வடிவாய்
விண்ணவர் போற்று மண்ணமெலப் போதும்
வியாபக னுகி நித்தனய்ப்
பாரினிற் சிறந்த வெண்ணெய் நல்லூரிற்
பரந்தெழு மெய்கண்ட தேவன்
பரம்பரை யதற்குத் தீபமாய் விளங்கும்
பரசிவ சாட்குண்ணிய ரூபா
கார் செறிசோலைக் கொற்றவன் குடியிற்
கனகசிங் காசனத் தமர்ந்த
கருணையின் வடிவா முமாபதி சிவன்பொற்
கழலிணை யிறைஞ்சி வாழ்த்திடுவோம்.

இச் செய்யுளின்கீழ் '**திருமுறைத் திரட்டு கொற்றங்குடி உமாபதி சிவாசாரி**

---

* இது விரைவில் அச்சிடப்படும்.

* இந்நூல் எட்டுத் திருவிருத்தங்களை யுடையது. அச்சிடப்பட்டிருக்கின்றது.

யாரேடுத்துத் திரட்டியது முற்றிற்று. உ-ம் திருவருட் பயன் வினு வெண்பாவில் 'திருமுறைத்திரட் டுணர்த்துந் தேவே' என்பதனுனுமறிக. நந்தனஞூ ஆடிமீ ருஉ சுவர்க்கபுரம் தவப்பிரகாச சற்குரு சரணர விந்தமே பொருளெனத் தெளிந்த சிவப்பிரகாசத் தம்பிரான் ஏடு. என்று எழுதப்பட்டிருக்கிறது. இதனுலே இவ்வேடு இற்றைக்குச் சுமார் தொன்னூற்றெட்டு ஆண்டுகட்கு முன்னர் எழுதப்பட்டதென்பதும், நூற்றண்டுகட்கு முன் இந்நூல் பலராலும் கையாண்டு வரப்பட்டதென்பதும் விளங்கும். இதிற்குறித்த சொர்க்கபுரம் மடம் இற்றைக்குச் சுமார் நாற்பது ஆண்டுகட்கு முன்னரே இடிந்து அழிந்து விட்டதென்பதை அடியேன் நேரிலறிவேன். ஆகவே இந்நூல் மிகப் பழைமையுடைய தென்பது விளக்கமாவதோடு மேற்குறித்த இரண்டு செய்யுள்களாலும் இத்திரட்டின் ஆசிரியர் உமாபதி சிவமென்பதும் அறிகின்ரேம்.

இந்நூல் இதுபொழுது தொண்ணூற்றுன்பது பாக்களை யுடையது. 1 பதிமுது நிலை, 2 உயிரவை நிலை, 3 இருண்மல நிலை, 4 அருளது நிலை, 5 அருளுரு நிலை, 6 அறியு நெறி, 7 உயிர் விளக்கம், 8 இன்புறு நிலை, 9 அஞ்செழுத்தருணிலை, 10 அணைந்தோர் தன்மை என்று பத்துப் பகுதியாகப் பகுக்கப் பட்டு, முறையே 14, 13, 6, 8, 7, 14, 12, 5, 4, 16 பாசுரங்களை யுடையது. மூவர் திருப்பாட்டுங்கொண்டது. இப்பகுப்பு கொற்றவன் குடிப் பெரியாரே செய்த திருவருட் பயன் பகுப்பினைத் தொடர்ந்து செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. இப்பொழுது பதிப்பிக்கப் பட்டுள்ள திருவருட் பயன் நூல்களிலெல்லாம் ஒரே பொருளைத் தரக்கூடியதாயினும் வேறு சொற்களைக் கொண்ட பகுப்போடு பதிக்கப்பட் டிருப்பினும் ஆசிரியர் காலத்துக்கு இருநூற்றண்டுகட்குப் பின்னிருந்த நிரம்பவழகிய தேசிகர் மேற்காட்டிய பகுப்புக்களையே கூறியுள்ளாரென்பது பழைய ஏடுகளாலும் அவரது உரையாலும் விளங்குகிறது.

இனி இத்திரட்டுக்கும் திருவருட்பயன் செய்யுட்கும் ஒற்றுமைப்பாடுண்டா வென ஆராய்வோமாயின் ஒற்றுமை யுண்டென்றே காண்கின்ரேம். எல்லாத் திருப்பாட்டுக்களையும் ஆராய இப்பத்திரிகை இடந்தராதாகையால் அஞ்செழுத்தருள் நிலை என்ற பகுதியை ஒரு சிறிது ஆராய்வோம். திருமுறைத் திரட்டில்,

விண்ணி னூர்மதி சூடிய வேந்தனை
எண்ணி நாமங்க ளோதி யெழுத்தஞ்சும்
கண்ணி னுள்கழல் காண்பிட மேதென்னில்
புண்ணி யன்புக லூருமென் னெஞ்சமே. க

கருவாய்க் கிடந்துன் கழலே
நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்ற னாமம்
பயின்றே னுனதருளால்
திருவாய் பொலியச் சிவாய
நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீ பாதிரிப்
புலியூ ரரனே. உ

வைத்த பொருணமக் காமென்று
சொல்லி மனத்தடைத்துச்
சித்த மொருக்கிச் சிவாய
நமவென் றிருக்கினல்லால்
மொய்த்த கதிர்மதி போல்வா
ரவர்பா திரிப்புலியூர்
அத்தனருள் பெறலாமே யறிவிலாப்
பேதை நெஞ்சே. ௩

ஏது மொன்று மறிவில ராயினும்
ஓதியஞ் செழுத்து முணர் வார்கட்குப்

பேத மின்றி யவரவ ருள்ளத்தே
மாதுந் தாமும் மகிழ்வார் மாற்பேறரே. ௪

என்ற நான்கு திருப்பாசுரங்களும் காணப்படுகின்றன. திருவருட் பயனின் ஒன்பதாவது பகுதியான 'ஐந்தெழுத் தருள்நிலை முதற்றிருக்குறள்

அருணூலு மாரணமு மல்லாது மைந்தின்
பொருணூ றெரியப் புகும்.

என்பது.

புகின் என்பது பாடபேதம். இதன் பொருள் பஞ்சாக்கரத்தினுண்மை எப்படியென்னில் வேதமும் புராணமும் அல்லாது மற்றுமுண்டாகிய சாத்திரங்களும் பஞ்சாக்கரத்தி னுண்மையை விளங்கச் சொல்லும் என்பதாம்.

இத் திருக்குறளை எடுத்தோதுந் திருக்குறள்,

இறைசத்தி பாச மெழின்மாயை யாவி
யுறநிற்கு மோங்காரத் துள்.

என்பது.

இதன் பொருள் இந்தப் பஞ்சாக்கரத்தில் நிட்டைகூடும் உபாயம் எங்ஙனமெனில் கர்த்தாவும், அருளும், மலமும் அழகு பொருந்திய திரோதமும் ஆன்மாவும் பிரணவ மிடமாக விருக்கின்ற எழுத்தஞ்சிலும்பொருந்தி நிற்கும் என்பதாம். இவ்விரு திருக்குறளாலும் எல்லா நூல்களும் சிவபெருமானது திருவஞ்செழுத்தையே ஓதுமென்றும், அது ஓங்காரத்தினிடமாக இறையெழுத்து முதலாக நிற்குமென்று மறிந்தோம். ஆதலினாலே அவனருள் அடைவதே மானிடப் பிறவியின் பயன் என்பதும் கண்டோம். இதனை 'விண்ணினார் மதிசூடிய வேந்தனை எண்ணி நாமங்களோதி' யென்பதும் தருவாய் சிவகதிநீ என்பதும் 'ஏதுமொன்று மறிவிலராயினும் ஓதி' யென்பதும் விளக்கும். இனி,

ஊன நடன மொருபா லொருபாலா
ஞானநடந் தானடுவே நாடு.

என்பது மூன்றாவது திருக்குறள்.

முன்னர்க் கூறப்பட்ட இறையாதி ஐந்தும் ஆன்மாவை எப்படிப் பற்றி நிற்கின்றதென்னில், மலமும் திரோதமும் ஒரு பக்கமும் இறையுஞ் சத்தியும் ஒரு பக்கமும் நிற்க நடுவிலான்மாவிருக்கின்றது. ஆயின் மலத்தைக்கடப்பதான அருமையான காரியம் எவ்வாறென்னில்,

விரியமன மேவியவ்வை மீளவிடா சித்தம்
பெரியவினை தீரப் பெறும்.

என்பது.

அஃதாவது மனமானது விரிந்து நிற்க மலமும் திரோதமும் இறுகப் புணர்ந்து உயிர்களைத் திரும்ப விடுவதில்லை. மலம் நீங்கியக்கால் அது திருவடிநீழலை யடையும். ஆகவே அதற்கு வழி பஞ்சாக்கரத்தை யுச்சரித்தலாம். உச்சரிக்கும் முறையாவது,

சிவமுதலே யாமாறு சேருமேற் றீரும்
பவமிதுநீ யோதும் படி.

என்பதாம்.

இதன் பொருளாவது: சிகாரவகாரமென்னும் இரண்டும் ஆதிக்கண்ணதேயாம் வண்ணம் உச்சரித்தல் கூடுமாயின் அந்நிலையே மாணவகனே! உனது பிறவித்துன்பம் நீங்கும். ஆகவே வீட்டினை விரும்பிய நீ உச்சரிக்கு முறைமை யிதுவாகும் என்பதாம். இதனை, 'திருவாய் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்' என்பதும், 'சிவாய நமவென்று இருக்கினல்லால்' என்பதும் நன்கு விளக்கும். இனி, அடுத்த திருக்குறளில் இவ்வாறு ஐந்

தெழுத்தை யோதுவதால் உண்டாகும் பயன் இதுவாகுமென்று கூறுகின்றார். இதனை, 'பாதிரிப்புலியூர் அத்தனருள் பெறலாமே' என்பதும் 'பேதமின்றி யவரவர் உள்ளத்தே மாதுந் தாமும் மகிழ்வார்' என்பதும் வலியுறுத்துவது காண்க. இதனை இன்னும் விரிவுபடக் கூறலாமாயினும் பத்திரிகை யிடந்தராது என்பதனைக்கருதி இம்மட்டோடு நிறுத்துகின்றேன். இதுகாறும் கூறியன கொண்டு இத் **திருமுறைத் 'திரட்டு** அன்றாடம் மனனஞ் செய்வதற் குரியவாறு திரட்டப்பட்டுள்ளதென்பதும், மிக்க பொருள்பொதிந்ததென்பதும் ஒரு வகையாக யறிகின்றோம்.

நன்றி மறவாமை

[சு. சுவாமிநாதன், மாணவன்]

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.—**திருக்குறள்.**

ஒருவன் செய்த நன்மையை மறந்து விடுவது அறமன்று. அவன் செய்த தீமையை செய்தபொழுதே மறந்து விடுவது உத்தமம் என்று சொல்லியிருக்கிறார் நமது நாயனார். ஆதலால் தந்தை, தாய், குரு, அரசன், தெய்வம், இவர்கள் செய்த நன்றியை எந்நாளும் மறவாதிருத்தல் வேண்டும். அவ்வவர்கள் செய்யும் நன்றியைப்பற்றிச் சிறிது கவனிப்போம்.

தந்தை செய்ந்நன்றி

தந்தையானவர் நமக்கு ஊணும் உடையும் கொடுத்து ஆதரிக்கிறார். நமக்கு ஏதாவது நோய்வந்து விட்டால் தன் உடல், பொருள், ஆவி மூன்றையும் கொடுத்து அவ்வியாதியை வரவொட்டாது தடுத்துக் காப்பாற்றுகிறார். நமது குழந்தைப் பருவம் நீங்கியபின் நம்மைப் பள்ளியிற் சேர்த்துப் படிக்க வைக்கிறார். அதோடு நீங்காது வீட்டில் படிப்புச் சொல்லித் தரும்படி உபாத்தியாயரை அமர்த்துகிறார். (Private tuition) நாம் கேட்கும் பதார்த்தங்களை மறுக்காது பிரீதியுடன் வாங்கிக் கொடுக்கிறார். அப்பேர்ப்பட்ட பிதாவுக்கு நாம் எஞ்ஞான்றும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோமன்றோ?

தந்தை தாய்ப் பேண்.
தந்தை சொன் மிக்க மந்திரமில்லை.
தாயிற் சிறந்த தோர் கோயிலுமில்லை.

—ஔவையார்.

இவை முதலிய பழமொழிகளையும் மறந்து நடக்கலாமா? கூடாது. பழியென்றும்பாராது 'தடிகொண்டு சாடித் தகப்பனைத் தண்டித்த தருதலை இவனெனப் பெயரெடுத்தல் ஒண்ணாது' பெரும்பாலும் தாய் தந்தையர் பெயரை விளக்குவதற்குத் தானே பிள்ளை பிறக்கிறது. 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வமன்றோ?' அவர்களை இகழாது போற்றி அவர்கள் குற்றங்களைப் பிறரறியாது மறைத்தலன்றோ பிள்ளைகளுக்கு இன்றியமையாத குணம். இதந் தெரிந்து ஐந்து வயதிலே கல்விக்கழகத்தில் விடுத்து, பூரண பண்டிதனாய்க் கல்வி பயிற்றுவித்து அவையோரெல்லாம் பூஜ்யதை செய்யத்தக்க யோக்யனும்படி செய்வது மறக்கற்பாலதன்று.

தாய் செய்ந்நன்றி

தாயானவள் குழந்தையைப் பெற்று தீம்பாலூட்டி, தாலாட்டிச் சீராட்டிப் பாராட்டி, 'கண் திறவாது, இறகு முளையாது இருக்கும் சிறு குஞ்சுகளைப் பறவைகள் தம் சிறகின்கீழ் அணைத்துக்கொள்வது போன்று, ஈ மொய்க்காமலும், குருகு பறவாமலும், எறும்பு கடியாமலும், வெயிற் படாமலும், பனி பெய்யாமலும், காற்று வீசாமலும், மார்பிலும் தோளிலும் அணைத்துக் கொள்கிறாள்.

தஞ்சமெனவரும் கன்றுக்கு இரங்கும் கறவைபோல், நெஞ்சு இரங்குகிறாள். அங்ஙனம் வளர்த்த தாய் செய்த நன்றியை மறந்து மனைவி சொற்கேட்டு அவளை அசட்டை செய்யும் அறிவிலிகள் ஐயோ! அருநரகத்தையே அடைவர். 'பெற்றதாயினும் உற்றதெய்வம் இவ்வுலகத்தினி லுளதோ?'

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

என்று சொல்லியுள்ளார் நமது தெய்வப் புலவர்.

அவள் செய்ந்நன்றியை எண்ணி, அவளுக்கு முதுமையில் வேண்டுவதை உதவி உபசரித்து வாழாதார் ஆறறிவு படைத்த மனிதர் என்று எண்ணப் படுவரோ? 'தன்னைப் பெற்ற ஆத்தாள் கிண்ணிப்பிச்சை எடுக்கிறாள். தம்பி கும்பகோணத்தில் கோதானம் செய்கிறான்' என்னும் சொல்லுக்கு இலக்காய் இருக்கக்கூடாது.

குரு செய்ந்நன்றி

குருவானவர் நமக்கு கல்வி கற்பிப்பதற்காக ஊண் உறக்கங்களைத் தவிர்த்து, ஆமைதானிட்ட அரிய முட்டைகளை இடைவிடாது நினைப்பதுபோல் சீடனுக்குப் பரிபாகம் உண்டாக வேண்டுமென்று தமது உள்ளத்தில் சதா நினைத்துக்கொண்டு மீன் தனது சினையை நோக்குவதுபோல் சீடனது அஞ்ஞானம் நீங்க அவனிடம் கிருபா நோக்கம் பூரணமாய் வைத்துப் பறவை தானீன்ற அண்டத்தைச் சிறகிலணைப்பது போன்று தேகபந்த மொழிய அவனைப்பரிசித்துத் தமது சந்நிதானத்தில் இருக்கச்செய்து அவனுக்குப் போதனை செய்கிறார்.

குருவை, மானைக் காட்டி மானைப் பிடிப்பதுபோல் மானிடஉருக்கொண்டு வந்த மகானுபாவனென மதித்து, அவர் சொல்லை மனிதர் சொல்லென நினையாது கடவுள் திருவாக்கென்று மதிக்க வேண்டும்.

குருவுபதேசமே காம, குரோத, லோப, மோக, மத மாத்ஸர்யமெனும் அறுவகை உட்பகைகளைச் சேதிக்கும் வாளாயுத மெனவும், குருப்ரசாதமே கடவுள் வரப்ரசாத மெனவும் நினைக்க வேண்டும். குருவில்லாத வித்தையு முண்டோ?

அரசன் செய்ந்நன்றி

அரசனானவன் உலகத்தில் அன்பு மிகுந்த தாய்போல் தோன்றி, மன்னுயிரைத் தன்னுயிராய்க் காக்கிறான். "மாதவர் நோன்பும் மடவார் கற்பும் அரசன் காவலில்லாவிடில் எவ்வாறு நிலையுறும்." அரசன் விஷ்ணுவின் அம்சம் என்று கருதப்படுகிறான். அவன் தர்மதேவதையின் அவதாரம். மாறனெனு மரசன் தன் கையையும் நியாயத்திற்கு விரோதமாய் நடக்கலாகாதென வெட்டிக் கொண்டான். மனு வேந்

தன் தன் மகன் மேலே இரதத்தைச் செலுத்தவில்லையா?

மாநிலங் காவலனாவான்
மன்னுயிர் காக்குங்காலை
தானதனுக் கிடையூறு
தன்னாற்றன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால்
கள்வரால், உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்துந்தீர்த்
தறங்காப்பா னல்லனோ?—**சேக்கிழார்.**

என்றபடி நாட்டிற்குத் தன்னாலாவது தன் மந்திரி ப்ரதானிகளாலாவது, எதிரிகளாலாவது திருடரா லாவது, களவு, கொலை, சர்ப்பனை முதலியன நடக்க ஒட்டாது குடிகளைக் காக்கிறான். முறை வழுவாது செங்கோற் செலுத்தி, கடுஞ்சொற் சொல்லாமல், கடுந் தண்டனையாவது ஏராளமான வரியையாவது விதியாமல் பக்ஷபாத மின்றி காக்கிறான். 'யாரைப் பகைத்தாலும் அரசனைப் பகையாதே.' அரச சபையில் அடிக்கடி நகைப்பது, இரகசியம் பேசுவது பரிகாசஞ் செய்வது, அடக்கமில்லா திருப்பது, அவனை எதிர்த்து அலக்ஷியமாய்ப் பேசுவது முதலியன வீண்போகாமல், திரவிய நஷ்டம், மானபங்கம், பிராணச்சேதம் இவைகளைத் தவறாது கொணர்விக்கும்.

செவிச்சொல்லுஞ் சேர்ந்தநகையு மவித்தொ
ஆன்ற பெரியா ரகத்து.—**திருக்குறள்.** [ழுகல்

தெய்வம்

கடவுள் நம்மைப் படைத்துக் காக்கிறார். அஞ்ஞான மெனும் இருளைப் போக்கி ஞானமென்னும் பிரகாசத்தில் ஈடுபடுமாறு இதய கமலத்தின்கண் இருந்துகொண்டு தூண்டுகிறார். மேலும், அதுபோதா தென்று ஆலயத்திலும் வீற்றிருக்கிறார். அப்பேர்ப்பட்ட கருணாநிதியைத் துதிக்க வேண்டுவது நம் கடனல்லவா? சில மூடர்கள், "தெய்வமாவது மண்ணாவது, அது ஒரு கல்தானே, அதையேன் துதிக்க வேண்டும், அவரவர்களே அவரவருக்குத் தெய்வம்" என்று உளருகின்றனர். தெய்வ மில்லாவிட்டால் சிருட்டி, க்ாப்பு, சம்ஹாரம் முதலிய தொழிலை யார் நடத்துகிறார்கள்? இப்பொழும் பிணங்கள் தாம் நடத்துகின்றனவோ? கடவுளை வணங்கியவர்களில் எத்தனை பேர் கெட்டார்கள்? ஆகையால் சிவ பெருமானாகிய பரம்பொருளைத்தொழ வேண்டும். சிவபக்தர்களைக் கடவுளின் தொண்டரல்லாத சில முண்டங்கள் அடித்து ஏளனம் செய்கிறார்கள். அவ்வாறுசெய்பவர் கொடிய நரகத்தையே அடைவர். அப்பக்தர்களைத் துதித்து வணங்குவோர் அவர்கள் புண்ணியத்தைக் கொள்வர். ஆதலால் சாதுக்கள் பாபம், புண்ணியம் எனும் இருவிலங்குகளால் பிணிக்கப்படுவதில்லை. முத்தி சாகரத்திலேயே நீஞ்சு கின்றனர். விபூதி, உருத்திராக்கங்களின் மகிமை தெரியாது அதைப் பெரும்பான்மையோர் அணிவதில்லை.

உருத்தி ராக்கத்தின் மகிமையை விளக்க ஒரு கதை சொல்லுகிறேன்.

வளம் பொருந்தியதொரு நாட்டை வனப்பு உடைய அரச னொருவன் ஆண்டு வந்தான். அவன் ஓர் அழகிய இராஜகுமாரியை மணந்து ஒரு நன் முகூர்த்தத்தில் அவளை நெருங்கினான். அவள் அவனை நோக்கி, 'உருத்திராக்கம் இருந்தால் என்னையணுகும். இல்லாவிடில் நெருங்காதேயு' மெனச் சொன்னாள். அரசனும் அவளை மறுநாள் தான் குறிப்பிடுமொருவன் தனக்கு அதன் மகிமையை விளக்குமாறு செய்ய வேண்டுமென ஆஞ்ஞாபித்துச் சென்றான். மறுநாள் அரசன் சுவற்றில் வரையப் பட்டிருந்த அரங்கநாதரின்

சித்திரத்தைச் சுட்டிக்காட்டி அதை 'விளக்கச் சொல்' என்றான். அவளும் அந்த அரங்கநாதரிடம் சென்று வணங்கி, அதன் மகிமையை விளக்குமாறு கேட்டுக் கொண்டாள். உடனே படுத்துக் கொண்டிருந்த அரங்கநாதர் எழுந்து உட்கார்ந்து ஓர் அழகியபாட்டைப் பாடினாரென்றால், அதன் பெருமை தானென்னே! அப்பாட்டின் கருத்து யாதெனில் ரோகம் முதலியவை அதை அணிந்தால் நீங்கு மென்பது.

அன்பர்களே! சிறப்புப் பொருந்திய ஆரறிவு படைத்த மானிடரே! எல்லோரும் நிஷ்காமிய தவமே செய்து முத்தியடையுங்கள். செய்த நன்றியை மறவாதீர்கள்.

செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது.—**திருக்குறள்.**

[**குறிப்பு**:—15 வயதுள்ள இம் மாணவனார் எழுதிய கட்டுரை நமக்கு மிக மகிழ்ச்சியை விளைவிக்கிறது. ஏனைய இளைஞர்களும் இத்தகைய ஊக்கத்தைப் பெறுக.-**பத்திராசிரியர்.**]

"சென்றடையாத திருவுடையான்"

[போ. முத்தையா பிள்ளை]

"நன்றுடை யானைத் தீயதில்
லானை நரைவெள்ளேறு
ஒன்றுடை யானை உமையொரு
பாகம் உடையானைச்
சென்றடை யாத திருவுடை
யானைச் சிராப்பள்ளிக்
குன்றுடை யானைக் கூறஎன்
னுள்ளங் குளிருமே"

இப்பாசுரத்தில், சிராப்பள்ளிக் குன்றுடையானைக் கூற என்னுள்ளங் குளிரும் என்பதைப் பொருளாகக் கொண்டு, ஏனையவெல்லாம் குன்றுடையானுக்குச் சிறப்பிலக்கணமாக அமைந்திருக்கின்றன. எவ்வாறெனில்:—

நன்றுடையானை என்றதனால் உயிர்களுக்கு நன்மை செய்தற்குரிய பேரருளுடைமை முதலிய குணங்களுடையனென்பதும், தீயதில்லானை யென்றதனால் தீமை செய்தற்குரிய அறியாமையைச் செய்யும் மலமில்லாதவன் என்பதும் பெறப்பட்டன. படவே, பேரருளுடைமை முதலிய குணங்களின் உண்மையும், மல மில்லாமையும் முத்தருக்கும் இருத்தலின், இவை குன்றுடையானுக்குச் சிறப்பிலக்கணமாகாதென்னும் தடை நிகழும். அத்தடையை விலக்குதற்பொருட்டு 'நரை வெள்ளேறு ஒன்றுடையானை உமையொரு பாகம் உடையானை' என்றார். எனவே, பசுக்களுக்குப் பதியாயும், பசுக்களுள்ளும் மலம் நீங்கப் பெற்ற முத்தரிடத்து விளங்கித் தோன்றுவதாயும், பசுக்களுக்கு அருளுதற் பொருட்டுப் பஞ்சகிருத்தியம் செய்வதாயும் உள்ள இலக்கணங்களுடையதென்பது பெறப்பட்டு, இவ்விலக்கணங்கள் அமையப் பெறாத முத்தர் விலக்கப்பட்டார். எவ்வாறெனின்:—

நரை வெண்மை என்பன ஒரு பொருட் சொற்களாதலின், அவற்றுள் ஒன்றேகூற அமையும். எனினும், கருமை சிறிது கலந்த வெள்ளேறும் இருக்குமாதலின், கருமை சிறிதும் இன்மையைக் குறித்தற்கு நரையைக் கூறினார். ஏறுடையான் என்றதனால் பொதுவாகப் பசுக்களுக்குப் பதியென்பதும், நரை வெள்ளேறு உடையான் என்றதனால், மலம் அறவே

நீங்கி எண் குணங்கள் விளங்கித் தோன்றப் பெற்ற முத்தரிடத்துச் சிறப்பாக விளங்கித் தோன்று வன் என்பதும், உமை யொரு பாகம் உடையான் என்றதனால் உயிர்க ளிடத்து அருளுடையானுய்ப் பஞ்ச கிருத்தியஞ் செய்வனென்பதும்பெறப் பட்டமைகாண்க. முத்தருக்குச் சிவா னந்தத்தை அநுபவித்தல் மாத்திரம் உண்டேயன்றி பசுக்களுக்குப் பதியா யிருக்குந் தன்மையும், முத்தரிடத்து விளங்கித் தோன்றுந் தன்மையும், பஞ்சகிருத்தியஞ் செய்யுந் தன்மையுங் கிடையா ஆதலின் முத்தர் விலக்கப் பட்டார். பசுக்கள் வேறு வேருதல் போல முத்தர் வேறு வேருதலின்மை யின், ஒன்றுடையான் என்றார். ஏறு டைமை ஏற்றில் விளங்கித் தோன்றல்.

மலம் நீங்கி எண் குணங்கள் விளங் கித் தோன்றப் பெற்றும், பசுபதியா யிருக்குந் தன்மை முதலியன சிவபெரு மானுக் கிருத்தல்போல முத்தருக்கு இல்லாமைக்குக் காரணம் உணர்த்த வேண்டிச் 'சென்றடையாத திருவுடை யானை' என்றார். திரு. எண் குணங் கள். சென்றடைதல், மலம் நீங்கப் பெற்ற முத்தரிடத்து விளங்கித்தோன் றல். படிகத்தினிடத்து விளங்கித் தோன்றும் மலரின் நிற முதலியன மலர்போல மணத்தைச் செய்யா. அவ் வாறே சிவத்தைச் சார்ந்து சிவமாய் நிற்கும் முத்தரிடத்து விளங்கித் தோன்றும் சில குணங்கள் பசுபதியா யிருக்குந் தன்மை முதலியவற்றைச் செய்யா. மலரினிடத்து நிறம் முதலி யன இயல்பாதல் போல, சிவபெரு மானிடத்து எண் குணங்களும் இயல் பாதலின், மலருக்கு மணம்போல, பசுபதியாயிருக்குந்தன்மை முதலியன சிவபெருமானுக்கு இயல்பாகவுண்டு. ஆகவே, முத்தர் சென்றடையுந் திரு வுடையர் என்பதும், சிவபெருமான் சென்றடையாத திருவுடைய னென் பதும் காரணம் என்றவாருயிற்று.

இத்தகைய சிறப்பிலக்கணம் வாய் ந்த சிராப்பள்ளிக் குன்றுடையானை வாழ்த்தின் உள்ளங்குளிரும் என்பது இப்பாசுரத்தின் பொருளாகும்.

பெரிய புராணம்

[C. K. சுப்பிரமணிய முதலியார்]

[சென்னை சர்வகலா சங்கத்தின் ஆதரவில் பச்சையப்பன் கலாசாலை யின்கண் (31-1-30, 1-2-30, 3-2-30) மூன்று நாட்களிலும் கோயம்பத்தூர் சைவத் திருவாளர் C. K. சுப்பிர மணிய முதலியார் B. A. (வழக்கறி ஞர்) அவர்கள் ஆற்றிய சொற்பெருக் கின் முக்கிய பகுதிகளைத் திரட்டி வேள் N. துரைக்கண்ணன் அவர்க ளால் வரையப்பட்டது.]

அன்பர்களே! யான் இதுபோது பேச எடுத்துக்கொண்ட பொருள் "பெரியபுராணம்" என்பதாகும். இப் பொருள்பற்றிப் பேசச் சர்வகலா சங் கத்தார் அடியேனுக்குக் கட்டளை யிட் டிருக்கிறார்கள். இதனைச் சேக்கிழாரும் அவர் காலமும், பெரிய புராணமும் அதன் கலைஞானங்களும், பெரியபுரா ணம் கவிச் சிறப்பும் பயனும் என மூன்றாகப் பகுத்துப் பேசலாமென எண்ணி யிருக்கிறேன். எனது பிரசங் கத்தின் முதல் நாளாகிய இன்று சேக் கிழாரும், அவர் காலமும் என்பதனை ஆராயலாமென்று நினைக்கிறேன்.

பெரியபுராணம் சமயநூலே யன்றி, ஒரு சிறந்த காவியமுமாகும். இந்நூல் இலக்கியத்திற்கு ஓர் எடுத்துக்காட்டான நூலாகும். அதனாலேயே இப்பெரியபுராணத்தைத் தமிழர்கள் மாத்திரமன்றிக் கிறித்தவர் முதலிய பிற சமயத்தவரும், பிற மொழியாளரும் பயில்கின்றனர். இலக்கியச் சுவையை நுகர்வதற்கு இப்பெரியபுராணம்ஏற்றதாக எவ்வாறு யாவராலுங் கொள்ளப் படுகிறதோ, அவ்வாறே தற்காலத்துக்கு இன்றி யமையாததான சரித்திர ஆராய்ச்சிக்கும் இதில் வேண்டிய பொருள்கள் இருக்கின்றன. அதனாலேயே மற்ற இலக்கிய நூல்களினும் இப்பெரிய புராணத்தைப் பிற சமயத்தவரும், பிற மொழியாளரும் வாசிக்கின்றனர். ஆனால் அவர்கள் படிக்கும் வகை வேறு; தமிழர்கள் படிக்கும் வகை வேறு. அதிலும் சைவ சமயத்தவர் ஓதும் முறை வேறு. எனவே, பெரியபுராணம் சமய நூலா யிருந்தும், சமய வுணர்ச்சி யுடைவர்களே யன்றி மற்றவர்களும் விரும்பிப் பயின்று அவர் அறிவிற்கேற்பப் பொருள் கொள்ளும் முறையில் இருப்பதே அதன் மாட்சியை நன்கு புலப்படுத்துகிறது. திருக்குறள்என்னும் சீரிய நூல் எவ்வாறு தமிழ் மொழியிலன்றி மற்ற மொழியில் அதுபோன்ற நூல் இல்லை யென்று சிறப்பித்துக் கொண்டாடப் பட்டு எல்லா மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட் டிருக்கிறதோ, அது போல பெரியபுராணமும் தமிழிலன்றி மற்ற மொழியில் உதனோடொப்ப வைத்து எண்ணக்கூடிய நூல் இல்லை யென்றுயான்சொல்லத்துணிவதோடு, பிற மொழிகளிலும் மொழிபெயர்த்து எல்லா மக்களும் பயிலும் தகுதி அந் நூலில் இருக்கிறதென்று கூறுவேன். அன்பர்களே!

இனி, இப்பெரிய புராணத்தை இயற்றிய ஆசிரியர் சேக்கிழார் வரலாற்றைச் சிறிது நோக்குவாம். பொதுவாகக் கவிவாணர்களும் புலவர்களும் மற்றைய மக்களோடு சேர்ந்து வாழ்பவர்களல்ல. அவர்கள் வாழ்க்கை அநேகமாகத் தனிப்பட்ட வாழ்க்கையேயாகும். அதனாலேயே அவர்கள் வாழ்க்கையை மற்றைய மக்கள் பின்பற்றவோ, அன்றி அவர்கள் வாழ்க்கை வரலாற்றை யறியவோ பெரும்பாலும் கடினமாக இருக்கிறது. சரித்திர வாயிலாய்ப் பார்க்கும்போதும், எல்லா நாட்டிலும், புலவர்களும், கவிவாணர்களும் பெரும்பாலும் இவ்வாறே தனித்தே வாழ்ந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. மேனாட்டு வரலாற்று நூலாசிரியர்களும் அவர்களின் வாழ்க்கை நிலையை யறிந்து எழுதுவதற்கு மிகச் சிரமப்பட்டிருக்கிறார்கள். நம் தமிழ்நாட்டுப் புலவர் பெருமக்களது வாழ்க்கை வரலாறுகளைத் திட்டமாக வரையறுத்து எழுதி வைக்காததே நாம் மேல்கூறி வந்தவைகளுக்குத் தகுந்த சான்றாகும். ஆனால் நம் சேக்கிழாரது வாழ்க்கை வரலாறு மற்றைப் புலவர்களின் வரலாறுகளைப் போலல்லாது திட்டமாக எழுதிவைக்கப் பட்டிருக்கிறது. அப்பெருமானுடைய வரலாற்றை அவருக்குப் பிற்பட்ட ஒரு நூறு ஆண்டுகளுக்குள்ளேயே கொற்றவன் குடி உமாபதி சிவாசாரிய சுவாமிகளால் நன்கு எழுதிவைக்கப்பட்டது. அவர் எழுதி வைத்ததே நமக்குப் பெரும் ஆதாரமாக இருக்கிறது. ஆதலால் அவரால் எழுதப்பட்ட சேக்கிழார் வரலாறு

யாவருக்கும் தெரிந்ததே யாகையால் அதுபற்றி யான் விரிவாகப் பேச விரும்பவில்லை. சேக்கிழார் பெருமான் தொண்டை நன்னாட்டின் கண்ணுள்ள குன்றக் குடியில் பிறந்தவராவர். சோணாடு, பாண்டி நாடு, சேர நாடு என்று கூறப்படுவது போல் தொண்டைநாடு என்னாது தொண்டை நன்னாடு என்று சிறப்பித்துக் கூறப் பட்டிருப்பதை, "தொண்டை நன்னாடு சான்றோ ருடைத்து" என்னும் ஔவைப் பெருமாட்டியின் திருவாக்கோடு இணைத்துப் பார்ப்பின் உண்மை விளங்கும். அச்சிறப்பினதாய தொண்டை நன்னாட்டிலுள்ள பதினெட்டுக் கோட்டங்களில் குன்றக்குடியும் ஒன்றாகும். நீர்நிலையாகிய ஏரியிருப்பதனால் அக்கோட்டத்துக்குப் புழல் கோட்டம் என்று பெயருண்டானதுபோல குன்று இருப்பதனால் இக்கோட்டத்துக்குக் குன்றக்குடி என்று பெயராயிற்று என்க. அக்குன்றக்குடியில் மலைக்கடவுளாகிய முருகப்பெருமான் எழுந்தருளி யிருக்கிறான்.

ஆசிரியர் நூலுக்கு வைத்த பெயர் திருத் தொண்டர் புராணம் என்பது. ஆனால் இப்போது வழங்குவது பெரிய புராணம் என்பதாகும். அது போன்றே ஆசிரியர்க்கும் பிள்ளைத் திருநாமமாக விருந்த அருண்மொழித் தேவர் என்பது வழக்கிலில்லாது சேக்கிழார் என்னும் குடிப்பெயர் வழக்கில் வழங்குவதாயிற்று. பட்டம் கொடுக்கும் முறை இக்காலத்துத்தான் இருக்கிறது என்று எண்ணுதற் கிடமில்லை. அக்காலத்தும் பட்டம் கொடுக்கும் வழக்கம் இருந்திருக்கிறது. ஆனால் முன்னர் அப்பட்டம் காரணத்தோடு கொடுக்கப் பட்டது. இப்பொழுதோ ஏதோ ஒரு கௌரவத்தையோ மதிப்பையோ கொடுப்பதாக இருக்கிறது. அநபாய சோழமன்னன் சேக்கிழார்க்குக் கொடுத்துள்ள "உத்தமச்சோழ பல்லவன்" என்னும் பட்டத்தையும், பாண்டிய மன்னர் மணிவாசகப் பெருமானுக்குக் கொடுத்துள்ள, "தென்னவன் பிரமராயன்" என்னும் பட்டத்தையும் ஆராய்ந்து பார்க்கும்போது எத்துணைப் பொருள் பொதிந்ததாய் இருக்கிறது என்பது தெரிகிறது. அப் பட்டங்களில் கொடுக்கப் பட்டவர்களுடைய தகுதியும், கொடுத்தவர்களுடைய மாண்பும் நன்கு விளக்கப்பட்டிருத்தலை நோக்கின் அப்பட்டங்களின் சிறப்பு தானே புலப்படும்.

இனி, சேக்கிழார் இருந்த காலத்தைப் பற்றி ஆராயவேண்டிய தவசியமாகும். அநபாய சோழ மன்னன் காலத்தேயே சேக்கிழாரும் இருந்தார் என்பதைச் சேக்கிழார் புராண வரலாற்றைக் கொண்டு நிலை நாட்டலாம். அன்றியும், இதற்கு அகச்சான்றும் ஆதாரமாக இருக்கிறது. சேக்கிழார் தாம் பாடியருளிய பெரிய புராணத்தில் ஒன்பது இடங்களில் அநபாய சோழ மன்னனைச் சிறப்பித்துப் பாடியிருக்கிறார். அவ்விதம் அம்மன்னனைப் புகழ்ந்து பாடுமிடத்தும், எட்டு இடங்களில் சோழ வம்ச முறையைக் கூறுமிடத்து வைத்துப் பாடி யிருக்கிறார். ஞானசம்பந்தப் பெருமான் நின்றசீர் நெடுமாறனை (கூன்) ஒங்கப் பாடியதாகச் சொல்லும்போது, 'செம்பியன் செங்கோ லென்ன நிமிர்ந்தது' என உவமான முகத்தால் மற்றோரிடத்தில் சேக்கிழார் அநபாய மன்னனைச் சிறப்பிக்கின்றார். இவ் வகச்சான்றால் சேக்கிழார் காலம் அநபாய சோழ மன்னனிருந்த காலமென்பது நன்கு பெறப்படுகின்றது.

சேக்கிழார் இருந்த காலத்தை நிலை நிறுத்தற்கு வரலாற்று நூலாசிரியர்கள் ஆராய்ச்சியையுஞ் சிறிது கவனித்தல் வேண்டும். தமிழ்நாட்டில் சமண சமயந் தலை யோங்கி நின்ற காலம் 5, 6, 7, 8-வது நூற்றாண்டுகளாகும். 10-ம் நூற்றாண்டி னிறுதியிலேயே தமிழ் நாட்டில் சமண சமயம் அடிச்சாயலாயிற்று. இப்பத்தாம் நூற்றாண்டில் தான் பெரிய புராணம் பாடப்பட்டது. நம் தமிழ் நாட்டு மன்னர்களாகிய சேர சோழ பாண்டியர்களில் சோழ குல மன்னர்கள் சூரிய வம்சம், சந்திர வம்சமென இரு பிரிவினராக அரசாண்டு வந்தனர். சந்திர வம்சத்தினர்க்கு மகப் பேறில்லாமையால், 10-வது நூற்றாண்டின் மத்தியில் சூரிய வம்சத்தினரே அவர்களரசையும் ஆளத் தொடங்கினர். சூரிய வம்சத்து வந்த சோழ மன்னரான ராஜ ராஜ தேவர் 10, 11-வது நூற்றாண்டுகளின் இடையே இருந்தார். இவர் தாம் தஞ்சைக் கோயிலை நிறுவினர். தஞ்சைக் கோயிலில் கல்வெட்டுகள் நிறைய வுள. அவற்றை யெல்லாம் ஒருங்கு சேர்த்து அரசாங்கத்தார் புத்தகங்களாக வெளியிட்டிருக்கின்றனர். 11-வது நூற் றாண்டின் துவக்கத்தில் தமிழ ராட்சி எங்கும் பரவியிருந்தது. 12-வது நூற்றாண்டில் அரசாட்சி செய்த முதல் குலோத்துங்கன் காலந்தான் சேக்கிழார் காலமெனச் சொல்லப்படுகிறது. ஆனால் கல்வெட்டுகள் இரண்டாவது குலோத்துங்கன் காலம் சேக்கிழார் காலம் என்றும், இக்குலோத்துங்கனுக்கே அநபாய சோழமன்னன் எனப் பெயரிருந்த தென்றும் கூறுகின்றன. முதல் குலோத்துங்கனுக்கு அநபாயனென்னும் பெயர் கிடையாது. கலிங்கத்துப் பரணியிலும் அநபாயனென்ற பெயர் காணப்படவில்லை. தொண்டைமான், பாலறாவாயர் என்னும் பெயர்கள் சிலாசாசனத்தில் காணப்படுகின்றன. சோழமன்னரால் தானஞ் செய்யப்பட்ட ஊர்களுக்குத் திருத்தொண்டத்தொகை நல்லூர், அநபாய நல்லூர், திருநீற்றுச் சோழநல்லூர் என்னும் பெயர்கள் இடப்பெற் றிருக்கின்றன. எனவே சிலாசாசன ஆராய்ச்சியாளர் 12-வது நூற்றாண்டில் அரசாட்சி செய்த இரண்டாவது குலோத்துங்கனே அநபாயனெனப்படுவான் என்றும், அக்காலமே சேக்கிழார் காலமென்றும் முடிவு கட்டுகின்றனர்.

இனி, பெரிய புராணமும் அதன் கலைஞானங்களும் என்பதனைச் சிறிது ஆராய்வாம். கலைஞானத்தின் பகுதிக்கும் மக்கள் சமூகத்திற்கும் தொடர்பிருக்கிறது. பெரிய புராணத்தில் 72 அடியார்களின் சரித்திரங்கள் இருக்கின்றன. அவ் வடியார்கள் ஒரே காலத்தில் வதிந்திருந்தவர் களல்லவானாலும், சேக்கிழார் காலத்தில் அவர்களுடைய வாழ்க்கை முறை மக்களால் ஒப்புக்கொள்ளப்பட் டிருக்கிறதென்பது, அக்கால மக்கள் பெரிய புராணத்தைப் போற்றி வந்தமையால் நாம் அறியக்கிடக்கிறது. அரசாங்க முறைகளைப்பற்றி மற்றைய காவியங்களில் அறியப்படுவதைவிடப் பெரிய புராணத்தில் அதிகமாய்க் கிடைக்கிறது. அரசனுடைய லட்சியம் ஐந்து விதமாகும். அவ்விலட்சியங்களைச் சேக்கிழார் பெருமான் மநுநீதிகண்ட புராணத்தில், "மாநிலங் காவலனாவான்மன்னுயிர் காக்குங்காலைத், தானதனுக்கிடையூறு தன்னால் தன் பரிசனத்தால், ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர் தம்மால், ஆனபயம ஐந்தும் தீர்த்து அறங்காப்பானல்லனோ" என்று விளக்கிக் கூறுகின்றார். இதனால் அக்காலத்து அரசாட்சி எத்தகையது என்பது நன்கு புலப்படும்.

அரசர்களுள் முடிசூட்டும் வழக்கம் சாதாரண சடங்கெனச் சிலர் நினைக்கலாம். ஆனால் அதில் ஒரு விசேஷமிருக்கிறது என்று தெரிகிறது. நம் காலத்தில் நிகழ்ந்ததான சக்கரவர்த்தி முடிசூட்டு விழாவின்போது நம் மன்னர் பெருமான் தம் நாட்டைவிட்டு டெல்லியில் வந்து முடிசூட்டியமை

யானும் இவ்வுண்மை ஒருவாறு உணரக்கிடக்கிறது. அரசர்கள் முடிசூட்டிக் கொள்ளுமிடமென்று ஒரு சில குறித்த ஊர்களேயும், அரசர்களுக்கு முடியைச் சூட்டுதற்குரியார் இன்னுரென்று குறித்த ஒரு சில அறிஞர்களேயும் அக்காலத்து வகுத்து வைக்கப்பட்டிருக்கிறது.

"முடிசூட்டும் தன்மைநிலை
தன்மைத்தாகு மவ்வூர்"

என்றும்,

"வேரித்தொடங்கற் சுடர்மாலைகள் சூழ்முடி
சூடுசாலை யங்கட்கொடுபுக்கரி யாசனத்
[தேற்றி"

என்றும் சேக்கிழார் நாயனர் இவற்றை இனிது விளக்கியருளுகிருர்.

அக்காலத்துச் சிற்றரசர்கள் முடி சூடுவது வழக்கமில்லை. அது மன்னர் மன்னனுக்கே உரியது என்க. இதனை, "முடியொன்று மொழிய அரசர் திரு வெல்லா முடையராயினுர்" என்னும் சேக்கிழார் சுவாமிகள் திருவாக்கால் அறியலாம். அதுபோன்றே மன்னர் பிரானுக்கு முடிசூட்டும் அதிகாரமும் ஒரு சிலருக்கே உண்டென்பதை,

"ஒருமை யுரிமைத் தில்லைவா ழந்தணர்க
டம்மி லொருகுடியைப்
பெருமை முடியை யருமைபுரி
காவல் பேணும்படி யிருத்தி"

என்று பெரிய புராணம் விளக்கிக் கூறுகின்றது. நம் மன்னர் பெருமானும் குருவொருவரை வைத்தே அவர் கையால் முடிசூட்டி யிருக்கிருர்.

இனி, சமயப் பாதுகாவல் அரசருடைய கடமைகளுள் ஒன்றென்பது நம் பெரிய புராணத்தால் தெரிகிறது. அக்காலத்திருந்தது போலவே இக் காலத்தும் சமயப் பாதுகாவல் செய்யப்படுவதால், அது அரசருடைய கடமையன்று என்று யாரும் சொல்ல முடியாது. நமது மன்னர் மன்னன் சமயப் பாதுகாப்பு தமது கடமைகளுள் முதன்மையென்பதைக் குறிப்பதற்கு Defender of the Faith என்னும் பட்டம் அணிந்திருப்பதால் சமயப் பாதுகாப்பு அரசர்களால் எவ்வளவு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது என்பது நன்கு விளங்கும். அமைச்சர்களில் நீதி மந்திரிகள் என்ருெரு பகுதியும், படையெடுப்பு மந்திரிகள் என்ருெரு பகுதியுமென இரு வகையாகப் பிரிக்கப்பட்டு அரசாங்கம் நடந்தது. ஆகவே தமிழர் ஆட்சி முறை மேற் சொன்னபடி மூவகையாக இருந்தது என அறியலாம்.

இனி, போர் முறையை ஆராயின் வாகை, வஞ்சி, தும்பை, முதலிய மாலைகளைச் சூடுதலால் போர் அடையாளங்கள் காணப்படுகின்றன. வாகைமாலை சூடிய போர்வீரனைப் பார்த்தால் போர் முடித்த வீரன் எனத் தெரிந்துகொள்ளலாம். இவ்வாறே ஒவ்வொரு மாலையடையாளங்களுக்கும் ஒவ்வொரு பொருள் குறிக்கோளாக நிற்கிறது. இக்காலத்தும் வெள்ளைக் கொடி தாங்கிய போர்ப் படையைப் பார்ப்பின், சமாதான முறையில்வரும் படை என நாம் தெரிந்து கொள்ளுகிறோம். தமிழர்களுடைய அரசாங்கக் குறிக்கோள் எத்துணை சிறப்பில் இருந்தது என அறிவதற்குப் பிராணிகளுடைய பேச்சுக் குறிகளை யறிவதற்கும், அறிந்து கொள்வதற்கும் தமிழரசர்கள் அவாக் கொண்டிருந்தார்கள் என்ற வரலாறு தகுந்த ஏதுவாகும். சேரமான் பெருமாணுயனர் வரலாறு இதற்குத் தகுந்த சான்ருகும். பிராணிகளின் பேச்சைய றிந்ததனுலேயே அவருக்குக் கழறிற்றறிவார் என்னுஞ் சிறப்புப் பெயர் வழங்கியது. 64-வித கலைஞானங்களில் பிராணிகளின் பாஷையை யறிதலு மொன்ருகும். நம் தமிழரசர்கள் தங்கள் அரச பதவியைத் தவிர்த்து (ராஜிஞமாசெய்து) இருக்கின்ருர்கள். மற்ற நாடுகளில் இவ்வாறு எந்த அரசனுகிலும தன் அரசபதவியை விட்டுத் தானே விலகியிருக்கிருனு என்பதைத் துருவியாராய்ந்தால் நம் தமிழரசர்கள் எவ்வித விழுமிய பொருளிலும், எவ்

விதமேன்மையான பதவிகளிலும் எவ்வளவில் பற்று வைத்திருந்தார்கள் என்பதை யறியலாம்.

குடி மக்கள் அமைதியான வாழ்க்கை நடத்துவதைக்குறித்துத் தெரிவித்தற்குத் ' **தண்டவழக்கம்** ' என்றொரு நூல்தமிழர்களுக்கு இருந்திருக்கிறது. அதில், சொத்துப் பாதுகாப்பு, உயிர் பாதுகாப்பு, என இருவகையாகக் கூறப்பட் டிருக்கிறது. சேக்கிழார் பெருமான் "இத்தனை காலமும் நினது சிலைக்கீழ்த்தங்கி யினிதுண்டு தீங்கின்றி யிருந்தோம்" என்று அரசர்களின் கடமையைக் குடிமக்கள் வாயில் வைத்துக் கண்ணப்பர் புராணத்தில் கூறுகின்றார். இதனால் தமிழர்களின் நாகரிக அரசாட்சியின் மாட்சியை நன்கு அறியலாம். அரசமுறையில் சாக்ஷிச் சட்டம் என்பது ஒன்றாகும். அச்சாக்ஷிச் சட்டம் இக்கால முறை போலல்லாது மிகச் சிறப்புற்ற முறையிலிருந்தது. தடுத்தாட்கொண்ட புராணத்தில் சேக்கிழார் சாக்ஷிச் சட்டமுறையை, " ஆட்சியி லாவணத் திலன்றி மற்றயலார் தங்கள் காட்சியின் மூன்றிலொன்று காட்டுவாய்" என்றும் " அரண்டரு காப்பில் வேறொன்றழைத்துடனொப்பு நோக்கி" என்றும், " மற்று மேலெழுத்திட்டார்க, ளாசிலா வெழுத்தை நோக்கியவை யொக்கும்" என்றும் இவ்வடிகளால் தெள்ளத் தெளிய விளக்கிச் செல்கின்றார். இதுவரை ஒருவாறு தமிழர்களின் கலைஞானப் பகுதியையும் அரசியலையும் கூறினோம்.

இனி மூன்றாவதாக பெரிய புராணக் கவிச்சிறப்பும், அதன் பயனும் என்பதைப் பற்றி யாராய்வோம். சமூகநிலை, சாதி நிலை என இருவகை இருப்பினும், சமூகநிலைக்குச் சாதி நிலை இடையூறாக இருக்கவில்லை என்பது பெரிய புராணத்தால் அறியக் கிடக்கிறது. ஆனால் தற்போதோ அவ்வாறு சாதிநிலை சமூகநிலையைப் பாதிக்கிறதா என்பது அன்பர்கள் ஆராய வேண்டிய தொன்று. அக்காலத்தில் குலகோத்திரம் முதலியன பேசப்பட்டே திருமணங்கள் நடைபெற்றிருக்கின்றன. உயிரோடு உயிர்கலக்கும் முறையிலேயே திருமணங்கள் அக்காலத்து நடைபெற்று வந்திருக்கின்றன. மணமக்கள் இன்னார் என நிச்சயிக்கப்பட்ட வுடனேயே திருமணஞ் செய்யப்பட்டு விட்டதாக எண்ணப்பட்டு வந்திருக்கின்றது. இவ்வித நிகழ்ச்சிகளைத் திலதவதியார் முதலியோர் வரலாறுகளில் சேக்கிழார் காட்டுகின்றார்.

இனி, இக்காலத்துச் சீர்திருத்தக்காரர்கள் வேண்டும் சீர்திருத்தங்களுக்குப் பெரியபுராணம் பெரிதும் ஆதாரமாக இருக்கிறது. இவ்வுண்மையை யறியாதார் பெரியபுராணம் சீர்திருத்தத்துக்கு முட்டுக்கட்டையாக இருக்கிறது எனச் சீறி வீழ்கின்றார். இளையான்குடிமாறநாயனார், சிறுத்தொண்ட நாயனார், அமர்நீதி நாயனார் முதலியோரின் புராணங்களில் இல்வாழ்க்கை பெரிதும் பெண்மணிகளின் உதவியாலேயே நடைபெற்று வந்ததென்பது தெரிகிறது. இன்னிசைக்கு நீலகண்டப் பெரும்பாணர், ஆனாயர் இவர்களின் சரிதத்திலும், பாதத்தின் இலக்கணத்துக்கு அப்பர் சுவாமிகளின் சரிதத்திலும் இடமிருக்கிறது. அகப்பொருள் துறைகளைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரிதத்தாலும், மருந்து வகைகளையும், நோய்வகைகளையும் திருஞான சம்பந்தப் பெருமான் சரிதத்தாலும் அறியலாம். பாம்பு கடித்தால் உண்டாகும் விஷ வுணர்ச்சி விரிவாகச் சொல்லப்படுகிறது.

பெரிய புராணம் காவிய அமைப்புக்களிற் சிறந்து விளங்குவதொன்றாம். இக் காவியத்துக்குத் தலைவர் சுந்தரமூர்த்தி சுவாமிகளும், தலைவியார் பரவையார், சங்கிலியார் ஆகிய இருவரும் ஆவர். காவிய அழகு பத்தில் சிறந்தது மூன்று. அவை தன்மை, உவமை, உருவகம் என்பனவாம். சேக்கிழார் இவ்வழகுகளைக் காட்டும் இடங்க

ளில் சிலவற்றைப் பார்ப்பாம். தன்மை யணியை,

“ காலெல்லாம் தகட்டு வரால் ”

“ புயலளப்பில வெனவலை
 புறம்பணை குரம்பை
யயலளப்பன மீன்விலைப்
 பசும்பொனி னடுக்கல்
வியலளக்கரில் விடுந்திமில்
 வாழ்நர்கள் கொணர்ந்த
கயலளப்பன பரத்தியர்
 கருநெடுங் கண்கள் ”

“ பற்றிய பைங்கொடிச் சுரைமேற்
 படர்ந்தபழங் கூரையுடைப்
புற்குரம்பைச் சிற்றில்பல
 நிறைந்துளதோர் புலைப்பாடி ”

என்னும் அடிகளில் எடுத்துக் காட்டுகின்ருர். உவமை யணியை விளக்குவார்,

“ பிள்ளை தைவரப் பெருகுபால்
 சொரிமுலைத் தாய்போன்
மள்ளர் வேனிலின் மணற்றிடர்
 பிசைந்து கைவருட
வெள்ள நீரிரு மருங்குகால்
 வழிமிதந் தேறிப்
பள்ள நீள்வயற் பருமடை
 யுடைப்பது பாலி ”

என்று கூறியருளிஞர். மற்றும், நடைச் சிறப்பு, சொல்லும் பொருளு மொத்தியங்குதல் ஆகியசிறப்புகளைப் பெரிய புராணத்தில் பல இடங்களில் காணலாம். ஏனுதி நாயஞர் புராணத்தில் போரினைப் பற்றிப் பாடும்போது அவ் வோசையோடு பாடுகின்ருர். அவற்றை யெல்லாம் விரிப்பிற் பெருகும்.

இனி, பெரிய புராணத்தின் பயனைப்பற்றி ஒரு சிலவார்த்தைகள் கூறி எனது சொற்பொழிவை முடித்துக் கொள்ளுகிறேன். ஒவ்வொரு காவியத்துக்கும் ஒவ்வொரு குறிக்கோள் உண்டு. அதுபோலவே பெரிய புராணத்திற்கும் ஒரு குறிக்கோள் உண்டு. அக்குறிக்கோளை ஆசிரியர் சேக்கிழார்,

“ ஊன டைந்த உடம்பின் பிறவியே
 தான டைந்த உறுதியைச் சாருமால் ”

“ எந்நிலையில் நின்ருலும்
 எக்கோலங் கொண்டாலும்
மன்னியசீர் சங்கரன்ருள்
 மறவாமை பொருளன்றே ”

என்று நமக்கு எடுத்துக் காட்டுகின்ருர். மக்களாகிய நாம் வாழ்க்கையைச் செலுத்தும்போது ஒரு சிறந்த குறிக்கோளை வைத்துக்கொண்டே வாழ்தல் வேண்டும். அக்குறிக்கோள் அடிமைகளாகிய நாம் - சிற்றறிவுடைய நாம் எல்லா உயிர்களுக்கும் நாயகஞகிய இறைவனை - பேரறிவுப் பிழம்பாகிய ஆண்டவனை அடைந்து உய்தல்வேண்டும் என்பதாம்.

பெரிய புராணத்தில் 45 பாடல்கள் இடைச் செருகலாகச் சேர்ந்திருக்கின்றன. திருப்புறம்பயம் கல்வெட்டுகளால் இவை நன்கு தெரிகின்றன. அருண்மொழித் தேவராய சேக்கிழார் பெருமாஞல் திருத்தொண்டத் தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி, தேவாரம், அக்காலத்துக் கர்ண பரம்பரையாக வழங்கியவை, அரசாங்க அத்தாட்சி முதலியவைகளை ஆதாரமாகக் கொண்டு பெரிய புராணம் பாடப்பட்டது. மெய்கண்ட தேவரருளிய சிவஞான போதம் பன்னிரண்டாம் சூத்திரத்தில் சொல்லப்பட்ட,

“ செம்மலர் நோன்ருள் சேர லொட்டா
 அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
 மாலற நேய மலிந்தவர் வேடமும்
 ஆலயந் தானும் அறனெனத் தொழுமே ”

என்னும் சாத்திரக் கருத்து பெரிய புராணத்தில் தேங்கி வழிகிறது. அரசாங்கத்தார் கட்டளையின் வண்ணம் ஒருவாறு எனது பெரிய புராண ஆராய்ச்சிச் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டு முடிவுற்றது. குற்றங் குறைகளிருப்பின் அன்பர்கள் மன்னிப்பார்களென்று நம்புகிறேன். சிவம்.

திருவிழாவில் சமயபோதனை

நமது சமாஜத்தின் சார்பாகத் திருமயிலாப்பூரில் நடந்த திருவிழாவில் நான்கு தினங்கள் எளிய மக்களுக்குப் பயன்படுமாறு சமயபோதனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு மிகச் செவ்வையாக நடந்தேறியது. 1930ஆம் மார்ச்சுமீ 11உ தேர்த்திருவிழாவன்று மாலை 6 மணிமுதல் திரு. கி. குப்புச்சாமி முதலியார் "தேர்த்திருவிழாவின் உட்கருத்து" என்பதுபற்றியும் தூத்துக்குடி திரு. ச. முத்துக்குமாரசாமிப் பிள்ளை "திருவிழாக்களின் பயன்" என்பது பற்றியும் குறைந்த அறிவுடைய மக்களுக்கும் பயன்படக்கூடிய சொற்பொழிவுகளை எளிய நடையில் ஆலயத்திலேயே செய்தனர். மறுநாள் அறுபத்துமூவர் உத்ஸவதினத்தன்று மாலை 5 மணி முதல் திரு. கி. குப்புச்சாமி முதலியார் "அறுபத்து மூவர் உத்ஸவம்" என்பதுபற்றியும், சூளைமேடு திரு. வடிவேல் பிள்ளை "திருத்தொண்டர் புராணம்" என்பதுபற்றியும், மயிலாப்பூர் இராமகிருஷ்ணமடத்துச் சுவாமிகள் ஒருவர் "பக்தி" என்பது பற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். கடைசி சொற்பொழிவு நடக்கும்போது திரு. ஆனூர் சிங்காரவேல்முதலியார் சில பகுதிகளை ஆக்ஷேபித்தனர். இறுதியில் திரு-கி. குப்புச்சாமி முதலியார் சில சமாதானங்கள் கூறினர். அடுத்த நாள் பிக்ஷாடனர் உத்ஸவ தினத்தன்று மாலை 7 மணி முதல் திரு-கி. குப்புச்சாமி முதலியார் "விற்றூண் ஒன்றில்லாத நல்கூர்ந் தான்காண்" என்பதுபற்றியும் திரு - வேள். துரைக்கண்ணனார் "பிக்ஷாடனர் திருக்கோல தத்துவம்" என்பதுபற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். திரு. வடிவேற்பிள்ளை அவர்களும் அவர்களைத் தொடர்ந்து பேசினார்கள். அடுத்தநாள் திருக்கல்யாண உத்ஸவதினத்தன்று மாலை 7 மணி முதல் திரு. வி. உலகநாத முதலியார், "திருக்கல்யாண உத்ஸவத்தின் உட்கருத்து" என்பதுபற்றியும் திரு. வேள்-துரைக்கண்ணனார் "நடராஜ தத்துவம்" என்பதுபற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். இறுதியில் கோயில் அதிகாரிகட்கும் சொற்பொழிவாளர்கட்கும் ஏனையோருக்கும் காரியதரிசியால் வந்தனம் கூறப்பட்டு கடவுள் வாழ்த்தொலி முழக்கத்தொடு சபைகலைந்தது.

சைவசித்தாந்த மகாசமாஜ அறிக்கைகள்

"சித்தாந்தம்" பத்திரிகை, சைவசித்தாந்த மகாசமாஜம், தேவார வெளியீடு முதலியனபற்றிய எல்லாக் கடிதங்களும், மணியார்டர்களும் **காரியதரிசி, சைவசித்தாந்த மகாசமாஜம், 150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை** என்ற விலாசத்துக்கே அனுப்பப்படல்வேண்டும். "சித்தாந்தம்" ஒவ்வொரு மாதயிதழும் அம்மாதம் 10-ம்தேதியன்று சென்னையில் ஜெனரல்போஸ்டாபீசுமூலம் அனுப்பப்படும். உரிய மாதயிதழை உரிய காலத்தில் பெறாதவர்கள் அம்மாதக் கடைசித் தேதிக்குள் **காரியதரிசிக்குத்** தெரிவிக்க வேண்டும். அவர்கட்கு **அடுத்த மாத யிதழோடு** தவறிய பத்திரிகை அனுப்பப்படும். அவ்வாறு உரிய காலத்தில் எழுதிப் பெற்றுக்கொள்ளாதவர்கட்கு இதழ் ஒன்று மூன்றணா வீதம் விலை போட்டு விற்கப்படும். "சித்தாந்தம்" பத்திரிகைக்குக் கட்டுரைகள் வழங்குவோர் தங்கள் தபால் விலாசத்தைத் தெளிவாக எழுதி, சைவ சமய உண்மைகள், அமைப்புகள், குறியீடுகள், ஒழுக்கமுறைகள் முதலியவற்றில் ஏதேனும் ஒன்றைத் திறம்பட விளக்கி, எக்காரணங்கொண்டும் விவாதத்துக்கு இடந்தாக்கூடிய பொருள்களை நாடாது அறவே ஒழித்து, சாதாரண அறிவுடைய மக்களும் உணரக்கூடிய எளிய **தமிழ்நடையில் மூன்று பக்கங்கட்கு மேற்படாமல் காகிதத்தின் ஒரு பக்கத்தில் மசியில் எழுதி** அனுப்புதல் வேண்டும்.

முருகன் திருவருட்பா

வடலூர் - இராமலிங்க சுவாமிகள் அருளிச் செய்தது; திருவருட்பாவில் ஐந்தாந் திருமுறையாகத் திகழ்வது. இராமலிங்க சுவாமிகள் திருவருட்பேறு குறித்துத் திருத்தணிகையில் முருகப் பெருமான் முன்னிலையில் "அழுத அழுகை" இந்நூலில் தேங்கி வழிகிறது. "முருகன் திருவருட்பா" கருங்கல் மனதையுங் கரைத்துக் கரைத்து இளகச் செய்யும்; திருவருட்பேற்றில் காதல் எழுப்பும். அதை ஒருகால் ஓதுவோரும் அன்பராதல் ஒருதலை.

விலை அணா 8.

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

அப்பர் சுவாமிகள் தேவாரம்

நாளது பிரமோதூத ஹு சித்திரை மீ சதய நக்ஷத்திர தினத்தன்று அப்பர் சுவாமிகள் திருவவதாரத் தலமாகிய திருவாமூரிலும் (தென்னாற்காடு ஜில்லா), திருமயிலாப்பூர் முதலிய ஏனைய தலங்களிலும் எழுந்தருளி யிருக்கும் சமயாசாரிய சுவாமிகட்கு வழிபாடுகள் முடிந்தவுடன் நமது சமாஜம் அச்சிட்டுள்ள அப்பர் சுவாமிகள் தேவாரம் புதிய சுத்தப்பதிப்பு வெளியிடப்படும். அதுகாலை அன்பர்கள் திரளாகக் குழுமி சுவாமிகள் திருவருளைப் பெறுமாறு வேண்டுகிறோம்.

இங்ஙனம் :

ம. பாலசுப்ரஹ்மண்யம், காரியதரிசி.

குறிப்பு :—சைவப் பஞ்சாங்கத்தின்படி இந்த திருநக்ஷத்திரம் சித்திரை மீ ௧௰ (23-4-1930) புதன்கிழமை யன்றும் வேறு சில பஞ்சாங்கங்களின்படி ௰௧ (24-4-1930) வியாழக்கிழமை யன்றும் வருகிறது.

தனிப்பிரதி ஒன்றன் விலை அணா 10.

தபாற்கூலி, பார்சல் செலவு முதலியன வேறு. வேண்டுவோர் உடனே முன்பணம் அனுப்புக.

சைவ சித்தாந்த மகா சமாஜத்தில்

விற்பனைக்குரிய புத்தகங்களின் அட்டவணை

	ரூ.	அ.		ரூ.	அ.
"சித்தாந்தம்" மலர் ஒன்று (பைண்டு பிரதி) ...	2	0	சங்க நூல்களும் சைவமும் ...	0	2
"சித்தாந்தம்" மலர் இரண்டு (பைண்டு பிரதி) ...	2	0	சைவர் மகாநாடு, திருப்பாதிரிப்புலியூர்.	0	8
சுந்தரர் தேவாரம்	0	4	அறுசமயப் பகுதி	0	2
திருவாசகம்	0	2	அறுபத்துமூன்று நாயன்மார் சரித்திர உண்மை	0	4
திருக்குறள் விளக்கம் - அறத்துப்பால்.	3	4	சிவஞானபோதம்	0	2
ஷெ பொருட்பால்.	4	8	அஷ்டப்பிரகரணம்	3	0
ஷெ காமத்துப்பால்.	1	12	சிவார்ச்சனா சந்திரிகை	1	8
ஷெ தொகுப்புரை.	0	8	சைவபூஷணம்	1	0
புலால்மறுத்தலுக்கு 50 காரணங்கள்...	0	2	சைவ சித்தாந்த பரிபாஷை ...	0	8
சர்வமத சம்மதம்	0	2	சிவஞான சித்தியார் மூலமும் பொழிப்புரையும்	2	8
திருநாளைப்போவார் தீக்குளித்ததேன்.	0	2	சிவஞான போதச் சிற்றுரை விளக்கம்	3	8
நள்ளிரவில் நகர்க்காட்சி ...	0	2	சர்வஞானோத்தரம்	1	8
கடவுள்	0	2	தசகாரிய விளக்கம்	0	8
பண்மயத்த மொழிப்பரவை ...	0	2	The Grace of Lord Siva (ஆங்கிலத்தில்)	0	4
சமயத்தின் சாரம்	0	2	திருக்குறட் சாரம்	0	8
சமய வளர்ச்சி	0	2	ஷெ (கலிக்கோ) ...	0	10
சுயமரியாதை சம்பாஷணை ...	0	2	ஆசார ஒழுக்கமுறை	0	4
திருஞானசம்பந்தர் (நாடகம்) ...	0	8	சிவார்ச்சனைத் திருமந்திரம் ...	0	1½
சைவப் பெரியார் தனிக்கூட்டத் தீர்மானங்கள்	0	2			

சுந்தரர் தேவாரம் மொத்தமாக வாங்குவோர்க்கு ரூபாய் ஒன்றுக்கு ஐந்து பிரதிகள் வீதம் கொடுக்கப்படும். மேற்கண்ட விலைகள் புத்தகக் கிரயம் மட்டுந்தான். தபாற்கூலி வேறு. பார்சல் செலவு, தபாற்கூலி, வி. பி. செலவு முதலியன. வாங்குவோரே செலுத்தவேண்டும்.

மேலேகண்ட அட்டவணையிலுள்ள புத்தகங்கள் தேவையாயின், சமாஜ ஆண்டுவிழா முதலிய கூட்டங்கள் நடக்குமிடங்களிலும் பெறலாம்; கீழ்வரும் விலாசத்துக்கு முன்பணம் அனுப்பியும் பெற்றுக்கொள்ளலாம்.

ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், காரியதரிசி.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,

150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, 150, Govindappa Naicken Street, G. T. Madras.